Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 343 | செவ்வாய்க்கிழமை | ஐப்பசி 23 ஆம் நாள் 09 நவம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## தொற்று 679 சாவு 19

கொழும்பு, நவ. 9

இலங்கையில் நேற்று 679 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய நாட்டில் இது வரை அடையாளம் காணப்பட்ட கொரோ

11 ›

# எமக்கு வாக்களித்தவர்களே எம்மை விரட்டியடிக்கிறார்கள்!

## உண்மையைச் சொல்லிப் புலம்புகிறார் அரச தரப்பு எம்.பி. பியதிஸ்ஸ



கொழும்பு, நவம்பர் 9

தற்போது, வீதியில் இறங்கிப் பயணிக்க முடியவில்லை, கிராமங்களில் நல்ல விடயத்துக்கோ துன்பியல் சம்பவங்களுக்கோ செல்ல முடிய வில்லை. எமக்கு வாக்களித்த மக்களே எங்களை விரட்டியடிக்கின்றனர் – என்று, அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

15 ›



## அரசைக் கவிழ்க்க ஒன்றிணையுங்கள்!

ஜே.வி.பி. யாழில் துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம், நவ. 9

கோத்தாபய அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று மக்

15 ›

## பௌத்த சின்னங்கள் காணப்பட்டால் சிங்களவர்கள் வாழ்ந்த இடமாகிவிடாது!

வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சுட்டிக்காட்டு


வவுனியா, நவ. 9

வெடுக்குநாறிமலையில் பௌத்த சின்னங்கள் காணப்படுமானால் அங்கு சிங்கள மக்கள் வாழ்ந்ததன் அடையாளமாகப் பார்ப்பது மிகவும் தவறானது என்று யாழ். பல்கலைக்கழக தொல்லியல்துறை

15 ›

## ‘சமயம் கடந்து நினைவு கூருவோம்’ அறிவிப்பை ஆயர்கள் கைவிடவேண்டும்

அருட்தந்தை மா.சக்திவேல் கோரிக்கை



வவுனியா, நவ. 9

‘சமயம் கடந்து இறந்தவர்களை நினைவு கூருவோம்’ எனும் அறிவித்தலை வடக்கு-,கிழக்கு ஆயர்கள் மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கௌரவத்தோடு வேண்டுகோள் விடுக்கின்றோம்

15 ›

### முச்சந்தி முரளி

“நாய் வாலை நிமிர்த்தினாலும் உவங்கள் காணி பிடிக்கிறதும் புத்தர் சிலை வைக்கிறதும் நிக்காது பாருங்கோ”



## மழையைச் சாதகமாக்கி நகைக்கடையில் திருட்டு

சாவகச்சேரியில் அதிகாலை சம்பவம்

சாவகச்சேரி, நவ. 9

வர்த்தக நிலையத்தினுள் புகுந்த திருடர்கள், அங்கிருந்து ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் வியா

15 ›

## இந்திய மீனவரின் சடலம் காரைநகரில்!

யாழ்ப்பாணம், நவ. 9

காரைநகர், கற்கோவளம் பகுதியில் உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் ஒன்று

15 ›



## கடற்படைக்கு காணி சுவீகரிப்பு: விரட்டப்பட்ட அளவையாளர்கள்!

தீவகப் பகுதிகளில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ்ப்பாணத்தின் தீவகப்பகுதிகளில் கடற்படைக்கு காணி அபகரிக்கும் நோக்கில் குழுக்களாகப்பிரிந்து களமிறங்கிய நில அளவைத் திணைக்களத்தினரை, மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் இணைந்து தடுத்துநிறுத்தி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டமை

11 ›

## பனை அபிவிருத்திச் சபையின்–பணிப்பாளர் சபை மீது உயர் நீதிமன்றில் வழக்கு

யாழ்ப்பாணம், நவ. 9

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் உட்பட 19 பேருக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் தொடர்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்

15 ›

## 2 டோஸ் போடாதவர்கள் வெளியேற விரைவில் தடை

சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 9

கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸையும் செலுத்திக் கொள்ளாதவர்கள் பொது இடங்களுக்கு செல்வதைத் தடுப்பதற்கு சட்டரீதி

11 ›

## தடுப்பூசி பெறாதவர்களை நிகழ்வுக்கு அழைக்காதீர்!

சாவகச்சேரி சுகாதாரப் பிரிவு அறிவுறுத்து

தென்மராட்சி, நவ. 9

கொரோனாத் தடுப்பூசி ஏற்றாதவர்களை நிகழ்வுகளுக்கு அழைக்காதீர்கள் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது. கொரோனாத் தடுப்பூசி முழுமையாக ஏற்றிக்கொண்டதற்கான தடுப்பூசி அட்டை இல்லாத 16 வய

11 ›

## யாழில் மழையால் 40பேர் பாதிப்பு

2 நாள்களுக்கு கனமழை தொடரும்

யாழ்ப்பாணம், நவ. 9

மழை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 40 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. கடும் காற்றுக் காரணமாக நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவில் நேற்று ஜே/02 கிராம அலுவலர் பிரிவில் 2

11 ›

# கொரோனாவுக்குப் போட்டியாக டெங்குத்தொற்றும் அதிகரிப்பு



கொழும்பு, நவ. 9

நாடளாவிய ரீதியில் கொரோனாவுக்கு அடுத்ததாக, டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்துள்ளது என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவிக்கையில்:

கடந்த ஒக்ரோபர் மாதத்தில், டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 979ஆக பதிவாகியுள்ளது. அடுத்து வரும் சில வாரங்களில் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். எனவே நுளம்புகள் பெருகும் இடங்களை ஒழிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேவேளை, விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் இந்த வாரம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும். மேற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட 59 உயர் ஆபத்துள்ள பகுதிகளில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படும் - என்றார். (ம-4)

# டெங்குத் தடுப்புப் பிரிவினர் யாழ்ப்பாணத்தில் கள ஆய்வு

யாழ்ப்பாணம், நவ. 9

சுகாதார அமைச்சின் தேசிய டெங்குத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

12 பேர் கொண்ட இந்தக் குழுவினர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கால் பாதிக்கப்படும் பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று, கள ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பிட்ட பகுதிகளில் டெங்கைப் பரப்பும் நுளம்புக் குடம்பிகள் மற்றும் நுளம்புகள் அடையாளம் காணப்பட்டால் அவற்றை ஆய்வுக்காக எடுத்துச் செல்லவுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் ஆய்வுகளை மேற்கொண்டனர். அதனைத் தொடர்ந்து மறுநாள் சாவகச்சேரி, கோப்பாய் பகுதிகளிலும், நேற்று பருத்தித்துறை, கரவெட்டியிலும் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இன்று செவ்வாய்க்கிழமை உடுவில் மற்றும் தெல்லிப்பழை பகுதிகளிலும், நாளை புதன்கிழமை சண்டிலிப்பாய், சங்கானை, பகுதிகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ம-4-17)

# டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை ஆரம்பம்



யாழ்ப்பாணம், நவ. 9

தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால், யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுகாதாரப் பிரிவினர் குடியிருப்பாளர்களின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று, டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். வீட்டுச் சுற்றாடலில் தேங்கியுள்ள வெள்ளத்தை அகற்றுமாறும், நுளம்பு பெருகக்கூடிய பொருள்களை அழிக்குமாறும் குடியிருப்பாளர்களுக்கு அறிவுறுத்தி வருகின்றனர். (ம-4-17)



# மரநடுகை மாதத்தில் மரக்கன்றுகள் நடுகை


யாழ்ப்பாணம்,நவ.9

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு, 'தமிழ்த்தேசியப் பசுமை' இயக்கத்தின் ஏற்பாட்டில், பொது அமைப்புக்களின் மூலம் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டு வருகின்றன.

இதனொரு கட்டமாக, வடமராட்சி அல்வாயிலுள்ள பொது அமைப்புக்களின் வேண்டுகோள்களுக்கு இணங்க அந்த அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் மரக்கன்றுகளை வழங்கினார். தொடர்ந்து அந்தப் பகுதிகளில் மரக்கன்றுகளும் நடப்பட்டன. (ம-4)

# சிறுவர் இல்லத்தில் 32 பேருககு கொரோனா



கொழும்பு, நவ. 9

சிறுவர் இல்லத்தில் 32 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பதுளை, பண்டாரவளையிலுள்ள சிறுவர் இல்லத்தில் ஐந்து வயதுக்குக் குறைந்த 27 பேர் உள்ளிட்ட 32 பேருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பண்டாரவளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் டீ.எம்.ஆர்.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், குறித்த சிறுவர் இல்லத்தில் ஊழியர்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளடங்கலாக 52 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையிலேயே 32 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (ம-ரி1)

# யாழில் இவ்வருடம் 10 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் இந்த வருடத்தில் இதுவரை 10 பேருக்கே டெங்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைவாக கடந்த 10 மாதங்களில் மட்டும் 9 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. அதேவேளை கடந்த வாரம் ஜே/77 கிராம அலுவலர் பிரிவில் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இவருடன் சேர்த்து 10 பேர் இதுவரை தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றுக் காலத்தில் நடைமுறையிலிருந்த பயணக்கட்டுப்பாடுகளால், வெளிமாவட்டங்களிலிருந்து பெரியளவில் எவரும் வரவில்லை. அதனால் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்தது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. மழைக் காலமும் ஆரம்பித்துள்ளது. எனவே மக்கள் டெங்குத் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாக்க சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டியது அவசியம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-4-17)

# பொலித்தீன், பிளாஸ்ரிக்குக்குத் தடை சுற்றாடல் அமைச்சு சோதனை

கொழும்பு, நவ. 9

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையைக் குறைப்பதற்காக நடைமுறையிலுள்ள தடை செய்யப்பட்ட பொருள்கள் தொடர்பில் மீண்டும் சோதனைகள் ஆரம்பிக்கப்படும் என்று சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி முதல் தடை செய்யப்பட்ட கொட்டன்பட்கள், பிளாஸ்ரிக் குச்சிகள், பொலித்தீன் பைகளாலான காற்று நிரப்பப்பட்ட பொம்மைகள் என்பவற்றின் உற்பத்தி விநியோகம் மற்றும் விற்பனை தற்போது முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

வருடாந்தம் சுற்றுச் சூழலுக்கு விடுவிக்கப்படும் இலஞ்ச்சீற்றுக்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 475 மில்லியனைத் தாண்டியுள்ளது. அதற்கமைவாக இந்தாண்டு இறுதிக்குள் 4 ஆயிரத்து 930 சோதனைகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று மத்திய சுற்றாடல் அதிகாரசபை சுற்றாடல் அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

இதேவேளை- தடை செய்யப்பட்ட பொருள்கள் தொடர்ந்தும் உற்பத்தி செய்யப்படுகிறதா என்பதைக் கண்டறியும் வகையில் சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளுமாறு, சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர மத்திய சுற்றாடல் அதிகார சபைக்குப் பணிப்புரை விடுத்துள்ளார் என்றும் சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-4)



# முகக்கவசம் நீக்கி படமெடுக்கத் தடை

கொழும்பு. நவ. 9

நிகழ்வுகளின் போது ஒளிப்படங்கள் எடுக்கும் சந்தர்ப்பத்தில், முகக்கவசத்தை நீக்காமல் இருப்பது தொடர்பில் ஒளிப்படக்கலைஞர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை ஒளிப்படம் எடுக்கும் போது எவரையாவது முகக்கவசத்தை நீக்குமாறு கூறவேண்டாம். அத்தியாவசிய தேவை தவிர்ந்து எந்தவொரு காரணத்துக்காகவும் நிகழ்வுகளின் போது முகக்கவசத்தை நீக்க வேண்டாம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-4)

# கவிதை நூல் வெளியீடு

முல்லைத்தீவைச் சேர்ந்த நதுநசியின் 'தடம் தந்த வரிகள்' கவிதை நூல் வெளியீடு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஒட்டுசுட்டான் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தமிழ்ச் சங்கத்தின் நிறுவுநர் தமிழருவி·சிவகுமாரன் கலந்து கொள்ளவுள்ளார். நூலாய்வுரையை ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் இராசசேகரம் தர்மிதா நிகழ்த்துவார். (ச)

# யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடும் மழைக்கான வாய்ப்பு!

## அவதானமாகச் செயற்படுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்



**யாழ்ப்பாணம், நவ. 9**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எதிர்வரும் 24 மணி நேரத்துக்குள் இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. அது தொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.**

நேற்று இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவப் பெயர்ச்சிக் காலநிலை ஆரம்பித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் இப்போது மழையுடன் கூடிய காலநிலை காணப்படுகின்றது. கடந்த 6ஆம் திகதி 33.5 சதவீத மழை வீழ்ச்சி யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குக் கிடைத்துள்ளது.

ஏனைய மாவட்டங்களிலும் மழை வீழ்ச்சி அதிகமாக இருக்கின்றது. சில இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அவ்வாறான நிலைமை எதுவும் இதுவரை ஏற்படவில்லை. எதிர்வரும் 24 மணி நேரத்துக்குள் இலங்கையின் தென்கிழக்கில் ஏற்பட்டுள்ள தாழமுக்க நிலைமை மேலும் வலுப்பெற்று, நகரும் என்றும், அதனால் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு அதிக மழை வீழ்ச்சி கிடைக்கும் - என்றும் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியிருக்கின்றது. அதேநேரம் கடல் சீற்றம் அதிகமாகக் காணப்படுவதால் கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்- என்றார். (எ-27)

# மன்னாரில் தொடர் மழை; தாழ்நிலங்களில் வெள்ளம்

மன்னார், நவ.9

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் கடும் மழையால் தாழ் நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நேற்றுவரை மன்னார் மாவட்டத்தில் 154 குடும்பங்களைச் சேர்ந்த 500 பேருக்கும் அதிகமானவர்கள் வெள்ளத்தால் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர் என்று மாவட்ட இடர் முகாமைத்துவ திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திலீபன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

இடம்பெயர்ந்தவர்களுக்கான இடைத்தங்கல் முகாம்கள் எவையும் தற்போதுவரை அமைக்கப்படவில்லை. இடம்பெயர்ந்தவர்கள் தங்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

தலைமன்னார் பியர் வடக்கு - கிழக்கு, மேற்கு, எமில் நகர், நானாட்டான் மோட்டக்கடை, கட்டைக்காடு, மாந்தைமேற்கு பிரதேச செயலர் பிரிவில் கிழக்கு, ஆகிய இடங்களில் வெள்ளப் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

சிறிய குளங்களும் வெள்ளப்பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. கட்டைக்காட்டிலுள்ள குளத்தின் துரிசு பாதிப்புக்குள்ளாகியுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது - என்றார்.

அதேவேளை, மாந்தை மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. வெள்ள நீரை வெளியேற்றும் நடவடிக்கைகளில் பிரதேச சபை ஈடுபட்டுள்ளது. (எ-60)





நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழையால் முல்லைத்தீவு, மூங்கிலாறு, தேராவில் கிழக்கில் முதிரை மரம் ஒன்று, வேருடன் பாறி வீழ்ந்துள்ளது. அதேவேளை, மூங்கிலாறு தெற்கு கிராமத்தில் உள்ள வீதிகள் பலவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையால், மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-13)



# நாச்சிக்குடா மக்கள் வெள்ளத்தால் பாதிப்பு

முல்லைத்தீவு, நவ.9

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விசுவமடு, நாச்சிக்குடா பகுதியில் பல குடும்பங்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பெய்துவரும் கடும் மழையால் அந்தப் பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது என்றும், வீட்டை விட்டு வெளியேற முடியாத நிலைமை உள்ளது என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதியில் சிறிய பாலம் ஒன்று அமைக்கப்பட்டமையே வெள்ள நீர் வெளியேறாமைக்குக் காரணம் என்று தெரிவித்துள்ள அந்தப் பகுதி மக்கள், தினக்கூலி வேலைக்குச் சென்று வாழ்க்கையை நகர்த்தும் பெரும்பாலானோர் வெள்ளத்தால் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர். (எ-113)




**வீ**டு கொளுத்திற ராசாவுக்கு நெருப்பெடுத்துக் குடுக்கிற மந்திரி எண்டதுக்கு நல்ல உதாரணம் எங்கட கனவு பாழாய்ப்போன எம்.பிதான். கொழும்பில இருந்து ஆரும் அமைச்சரோ, எம்.பியோ வந்தால் காணும், சின்ராசுவை (கனவு பாழாய்ப்போன எம்.பியை) கையில பிடிக்கேலாது. அவையோட ஒட்டிப்பிறந்த இரணைப்பிள்ளை மாதிரி அவையோடையே திரியிறதுதான் ஆளின்ர முழுநேரத் தொழில். அப்பிடி அவையோட நிண்டு விலாசம் காட்டினால், தனக்கு அரசாங்கத்தில நல்ல செல்வாக்கு இருக்கெண்டு சனம் நம்பும் எண்டதுதான் அவரின்ர ஐடியா. ஆனால், இந்த அரசாங்கம் அவரை கால் தூசுக்கும் மதிக்கிறேலை எண்டதும் எல்லாருக்கும் தெரியும். செருப்பால அடிக்கிறமாதிரி அரசாங்கம் எப்பிடிக் கேவலப்படுத்தினாலும், அதைப்பற்றி கனவு பாழான எம்.பி. கொஞ்சமும் வெக்கப்படாமல், சிரிச்சுக் கொண்டு வருவார். பிறகு இஞ்ச வந்து தான் சொன்னதுக்கெல்லாம் அரசாங்கம் தலையாட்டும் எண்ட மாதிரி கதையளப்பார், இங்க வாற மந்திரிமாருக்கு குடை பிடிப்பார்.

இப்பிடித்தான் இந்தமுறை யாழ்ப்பாணத்துக்கு வந்த இராஜாங்க அமைச்சரோடையும் பழக்கதோசத்தில ஒட்டிக்கொண்டு திரிஞ்சிருக்கிறார். ஆனால், அப்பிடித் திரிஞ்சதுதான் அவருக்கு ஆப்பாகிட்டுது. இப்ப ஆட்சியில இருக்கிறவை தொல்பொருள் ஆய்வு எண்டு சொல்லித்தான் எங்கட இடங்களுக்க வந்து புத்தர்சிலை இருந்தது, விகாரை இருந்தது, சங்கமித்தை வந்தஇடம், போன இடம் எண்டு வரலாற்றை மாத்தி எழுதுகினம். போதாக்குறைக்கு எங்கட கோயில்கள் இருக்கிற இடத்தில விகாரையின்ர சிதைவுகள் இருக்கெண்டு சொல்லி அந்த இடங்களையும் ஆட்டையைப் போட பாக்கினம். அப்பிடித்தான் காரைநகரில உள்ள காணி ஒண்டையும் தொல்பொருள் எண்டு சொல்லி , விகாரை கட்ட பிளான் பண்ணினவை. அது சனத்துக்கு தெரிஞ்சு அமைச்சர் வந்தால் எதிர்ப்பைக்காட்ட கூடிநிண்டவை. ஆனால் பாவம் எங்கட கனவு பாழான எம்.பிக்கு இந்த விசயம் ஒண்டும் தெரியாமல், அங்க அமைச்சரோட போய் சிக்குப்பட்டிட்டார்.

உண்மையா இந்த மக்களின்ர வாக்கில எம்.பியா வந்த அவர், என்ன செய்திருக்க வேணும்? தொல்பொருள் எண்ட பேரில நடக்கிற பித்தலாட்டங்களை நிப்பாட்டி, எங்கட இடத்தில அப்பிடியான கேவலங்கெட்ட வேலையளை இனியும் செய்யாதீங்கோ எண்டு அமைச்சரை வரவிடாமல் பண்ணியிருக்க வேணும். ஆனால் விகாரை கட்டதானே அமைச்சரைக் கூட்டிக்கொண்டு போய் காணியைக் காட்டிக் குடுக்கிறதை என்னெண்டு சொல்ல? கூட்டியும் குடுக்கிறார், காட்டியும் குடுக்கிறார் எண்டுதானே சொல்லலாம். அதாலதான் அங்க நிண்ட சனம் ஆத்திரப்பட்டு, அவரையும் அமைச்சரையும் கலைச்சதுகள். இவர் சனத்திட்ட போட்ட பருப்பொண்டும் வேகாததால அங்க இருந்து நைசா எஸ்கேப் ஆகிட்டார். ஆனால் விழுந்தும் மீசையில மண்படேல எண்டமாதிரி, அடுத்தநாள் அமைச்சரோட பிரஸ்மீட் ஒண்டு வைச்சு, ''எங்களை விரட்டியடிச்சதெண்டு சொல்றதெல்லாம்பொய். வேணுமெண்டா ஆதாரம் இருக்கு'' எண்டு அழாக்குறையாச்சொல்லி, ஒரு வீடியோவையும் போட்டார். ஆனால் அது நல்லா வெட்டுவெட்டெண்டு வெட்டி, எடிட் செய்த வீடியோ எண்டது பாத்தவுடனேயே எல்லாருக்கும் விளங்கிட்டு. பிறகென்ன, ஒவ்வொருத்தரும் வாய்க்க வந்த வெடிச்சிரிப்பை அடக்கினதுதான்.

இவ்வளவுகாலமும் அவரை ஏதேதோ பேர் சொல்லி கூப்பிட்டிச்சினம், பிறகு அமுல்பேபி, கனவு பாழான எம்.பி, எண்டு அதே சனங்களே நக்கலடிக்கிற அளவுக்கு அவரின்ர பேர் நாறிக்கொண்டே போகுது. இப்ப ''விரட்டியடிக்கப்பட்ட எம்.பி'' எண்டும் சனம் கதைக்கப்போகுதுகளே. அதுக்கு இவர் என்ன செய்யப்போறாரோ தெரியேலையே...!



- பட்சி

# வாக்களித்த மக்களே அரசை விரட்டியடிப்பர்

## முஸ்லிம் காங்கிரஸ் எச்சரிக்கை



கொழும்பு, நவ. 9

நாட்டின் பொருளாதாரத்தை வீழ்ச்சியடையச்செய்த இந்த அரசை, மக்கள் வீட்டுக்கு அனுப்பும் காலம் நெருங்கி வருகின்றது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா பரவலுக்கு மத்தியில் பொருளாதாரக் கொள்கையை அரசு கடைபிடித்தாலும், நாட்டில் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வு எந்தவிதத்திலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கைமீறி விட்டது.

நாட்டில் இன்று விவசாயிகள், ஆசிரியர்கள், மின்சார சபை ஊழியர்கள், துறைமுக ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கின்றன. பொருள்களின் விலைகளில் எந்தக் கட்டுப்பாடுகளும் கிடையாது. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் கிடையாது.

அத்தியாவசியப் பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்கும் வர்த்தமானியையும் அரசு வெளியிட்டுள்ளது.

எனவே, அனைத்து வேலைத்திட்டங்களும் தோல்வியடைந்து, பொருளாதாரத் தோல்வியின் விளிம்பில் காணப்படுகின்ற இந்த அரசை, வீட்டுக்கு அனுப்புகின்ற காலம் நெருங்கி வருகின்றது -என்றார். (ம-4)

---

# உற்பத்திகளை அதிகரித்தாலே பொருள்களின் விலை குறையும்

## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 9

உற்பத்தி நடவடிக்கைகளை அதிகரித்தால் மட்டுமே, பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த முடியும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா பேரழிவை அடுத்து, இலங்கை உட்பட உலகின் அனைத்து நாடுகளும் பொருளாதார மந்தநிலையால் பாதிக்கப்பட்டுள்ளன. கொரோனாத் தொற்று நெருக்கடியில் நாட்டை மூடுங்கள், மூடுங்கள் என்று போராட்டம் நடத்திய போது, கடும் நெருக்கடியில் நாம் தீர்மானம் எடுத்தோம். நாட்டை மூடமூட உற்பத்தி குறையும். மக்களின் சுயதொழில் இல்லாமற்போகும். எனவே உற்பத்தி நடவடிக்கைகளை அதிகரித்தால் பொருள்களின் விலை தானாகக் குறைவடையும் -என்றார். (ம-4)

---

# சிமெந்தின் புதிய விலை 1,375 ரூபா!

கொழும்பு, நவ. 9

50 கிலோகிராம் சிமெந்து பைக்கெற் ஒன்றின் விலை நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது என சிமெந்து நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி சிமெந்து பைக்கெற் ஒன்றின் புதிய விலை ஆயிரத்து 375 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- டோக்கியோ சிமெந்து நிறுவனம் டோக்கியோ சுப்பர் மற்றும் நிபொன் சிமெந்து என்னும் பெயர்களில் சந்தைப்படுத்தப்படும் 50 கிலோகிராம் சிமெந்து பைக்கற் ஒன்றின் அதியுச்ச சில்லறை விலை ஆயிரத்து 275ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

---

# ஊழல் மோசடியாளர்களை பாதுகாக்கின்றது அரசு

## மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 9

லிட்ரோ எரிவாயு ஊழலுக்குப் பின்னால் உள்ள திருடர்களை அரசு பாதுகாக்கின்றது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் ஆதாரமற்ற கருத்துக்களை வெளியிடுவதை நிறுத்தி, திருடர்கள் யார் என்பதை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். உரிய சட்ட நடவடிக்கை எடுக்க ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

திருடர்களை மறைப்பதற்கு தமது அதிகாரங்களை அரசு பயன்படுத்துவதே பிரதான கவலையாகும். அனைத்து மோசடிகளும் முன்னர் மூடி மறைக்கப்பட்டதைப்போலவே, இதுவும் மறைக்கப்படும். -என்றார். (ம-4)

---

# தப்பியோடிய கைதிகள் கைது

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து, கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட இரண்டு கைதிகள், தப்பிச் சென்ற நிலையில் பொல்கஹவல பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சிறைக்கைதிகளை அழைத்துக் கொண்டு மூன்று பஸ்கள் சென்றுள்ள நிலையில், பொல்கஹவெல மெத்தலந்த பிரதேசத்தில் வைத்து ஒரு பஸ்ஸில் இருந்த கைதிகள் கலகம் விளைவித்துள்ளனர். இதையடுத்து சிறைச்சாலை அதிகாரிகள் பஸ்ஸைத் திறந்து பார்க்க முற்பட்டபோதே, கைதிகள் தப்பிச் செல்ல முயற்சித்துள்ளனர். இரண்டு கைதிகள் கைவிலங்குகளுடன் தப்பிச் சென்றுள்ளனர். இருவரும் தகனசாலையின் மலசலகூடத்தில் மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-4-22)

---

# வெளிவிவகார அமைச்சுக்குள் எந்தப்பிரச்சினையும் இல்லை

## பீரிஸ் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 9

எனக்கும், எனது அமைச்சின் செயலாளருக்குமிடையில் எந்தவித பிரச்சினையும் இல்லை. ஒன்றாக இணைந்தே சர்வதேச மட்டத்திலுள்ள சவால்களை எதிர்கொள்கின்றோம் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் பல அமைச்சுக்களை நிர்வகித்துள்ளேன். பலருடன் இணைந்து செயற்பட்டுள்ளேன். அந்தவகையில் வெளிவிவகார அமைச்சின் தற்போதைய செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே மிகவும் அர்ப்பணிப்புடன் சிறப்பாக செயற்படக்கூடியவர். ஏதாவது வேலையை ஒப்படைத்தால் உரிய நேரத்துக்குள் அதனைச் செய்து முடிக்கும் ஒழுக்க விழுமியமும் அவரிடம் உள்ளது.

எனக்கும், அவருக்குமிடையில் எந்தவித பிரச்சினையும், பிளவும் இல்லை. அவ்வாறு உள்ளது என்று பரவும் தகவல்கள் போலியானவை. அவற்றை நிராகரிக்கின்றேன். எமது நாட்டுக்கு சர்வதேச மட்டத்தில் பல சவால்கள் உள்ளன.

அவற்றை ஒன்றாக இணைந்து குழுவாகவே நாம் எதிர் கொண்டுவருகின்றோம். மாற்றமும் ஏற்பட்டுள்ளது -என்றார். (ம-4-44)

---

# ஏப்ரல் 21 தாக்குதல் விவகாரம் அருட்தந்தை சிறில் கைதாகார்!

## சட்டமா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 9

ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவம் தொடர்பில் அருட்தந்தை சிறில் காமினி தற்சமயம் கைது செய்யப்படமாட்டார் என்று சட்டமா அதிபர், உயர்நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பான மனு மீதான விசாரணை நேற்று இடம்பெற்ற சந்தர்ப்பத்தில், சட்டமா அதிபர், இந்த விடயத்தை உயர்நீதிமன்றுக்கு அறிவித்தார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் அண்மையில் அருட்தந்தை சிறில் காமினி மற்றும் ஏனைய தரப்பினர் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை நிராகரித்து, அரச புலனாய்வுச் சேவையின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னிலையாகுமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால், அருட்தந்தை சிறில் காமினிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

எனினும், குறித்த சந்தர்ப்பத்தில் அவருக்குப் பதிலாக அருட்தந்தையர்கள் 3 பேர் முன்னிலையாகினர். வாக்குமூலம் வழங்குவதற்காக அருட்தந்தை சிறில் காமினிக்கு ஒரு வார கால அவகாசம் வழங்குமாறு கோரியிருந்தனர்.

இந்த நிலையில், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால், தான் கைது செய்யப்படுவதைத் தடுக்கும் வகையில் உத்தரவொன்றை பிறப்பிக்குமாறுகோரி, அருட்தந்தை சிறில் காமினி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# மக்கள் மயப்படுத்தப்பட்ட திட்டமே நாட்டின் தேவை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு

**கொழும்பு, நவ. 9**

**மக்கள் மயப்படுத்தப்பட்ட தேசிய வேலைத் திட்டமே இன்று நாட்டின் தேவையாக உள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



திஸ்ஸமஹாராம இணைஅமைப்பாளர் டி.வி.கே.காமினியின் கட்சி அலுவலகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உணர் திறனும், நாட்டின் மீது அக்கறையும், நேரடியான வேலைத் திட்டமும், மக்களின் அபிலாஷைகளுக்கு செவிசாய்க்கும் இதயமும், நல்லுள்ளமும் கொண்ட தலைமைத்துவத்தின் மூலமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். ஆவேசத்தாலும், ஆக்ரோசத்தாலும் நாட்டை ஒரு அங்குலம்கூட முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. நாட்டு மக்களின் வாழ்க்கையைப் பாதுகாத்து, மனித வளத்தை மேம்படுத்தி, அவர்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதன் மூலமே எமது நாட்டை முன்னேற்ற முடியும். பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியுமாக அமைவது ஆவேசம், வைராக்கியம், குரோதம் போன்ற செயற்பாடுகளால் அல்ல. கலந்துரையாடல், கருத்துப்பரிமாற்றத்தில் இணக்கம் காணல், கருத்துக்களுக்கு செவி சாய்த்தல், ஜனநாயகம் போன்ற மனிதாபிமான மற்றும் நெறி முறைக் கொள்கைகள் மூலமே தீர்வைக்காண முடியும். தற்போதைய அரசின் செயற்பாடுகள் குறித்து நாட்டு மக்கள் அறிந்து வைத்துள்ளதால் அதுதொடர்பில் பேசுவதில் பயனில்லை. எமது வேலைத்திட்டம் அனைத்தும் சுபீட்சத்துக்கான நாடும், சௌபாக்கிய மிக்க தேசமுமாகும். அது ஒருதரப்பினருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்காது. நாட்டின் ஒட்டு மொத்த குடிமக்களையும் அடிப்படையாகக் கொண்டதாக அமையும்- என்றார். (ம-4)



## 'யுகதனவி' ஒப்பந்தத்தை சபையில் முன்வைக்கவும்

### ஐ.தே.க., ஐ.ம.ச. வலியுறுத்து

கொழும்பு, நவ. 9

நாட்டில் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ள 'யுகதனவி' உடன்படிக்கையை சபையில் சமர்ப்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன நாடாளுமன்றில் வலியுறுத்தின.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போது கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க,

'யுகதனவி உடன்படிக்கை தொடர்பில் எமது கட்சி இன்னும் நிலைப்பாடொன்றை எடுக்கவில்லை. எமது கட்சி மட்டுமல்ல மூன்று நான்கு கட்சிகள் தமது நிலைப்பாடுகளை இன்னும் அறிவிக்கவில்லை. எனவே, மேற்படி உடன்படிக்கையை அரசு நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டும். அப்போது அது தொடர்பில் ஆராய்ந்து முடிவொன்றை எடுக்கலாம்' என்றார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல, 'யுகதனவி' ஒப்பந்தம் அமைச்சரவைக்குக்கூட வரவில்லை, திருட்டுத்தனமாகவே கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று அமைச்சர் ஒருவரே பகிரங்கமாகக் குறிப்பிட்டுள்ளார். ஒப்பந்தம் எமக்கு அவசியம்- என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏனைய சில உறுப்பினர்களும் 'யுகதனவி' உடன்படிக்கையைக் கோரினர். இதற்குப் பதிலளித்த சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, குறித்த உடன்படிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படும் என்று மின்சக்தி அமைச்சர் உறுதியளித்துள்ளார். அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்- என்றார். (ம-4-44)



## 8 மில்லியன் அமெரிக்க டொலர்; நஷ்டஈடு கோருகிறது சீனா

கொழும்பு, நவ. 9

சீன சேதனப்பசளை கப்பலின் ஏற்றுமதியாளர்களான சீன சேதன உர நிறுவனம், விவசாய அமைச்சின் கீழுள்ள தேசிய தாவரத் தடுப்புக் காப்பு சேவையிடமிருந்து 8 மில்லியன் அமெரிக்க டொலர் இழப்பீடு கோரி, நிபந்தனைக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

விஞ்ஞான ரீதியான பரிசோதனை முடிவுகளைமீறி பொய்யான சோதனை முடிவை கொண்டு தவறான பரப்புரையை முன்னெடுத்து அபகீர்த்தியை ஏற்படுத்தியமைக்கே இவ்வாறு இழப்பீடு கோரப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தக் கடிதத்தில், இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட, ஹிப்போ ஸ்பிரிட் கப்பலில் உள்ள சேதன உரத்தில் அர்வீனியா எனப்படும் தீங்கு விளைவிக்கும் பக்றீரியாக்கள் இல்லை எனவும், அதில் அதிக பாதுகாப்பான அதிதிறன் கொண்ட சேதன உரமே உள்ளது எனவும் மேற்படி கடிதம் கிடைத்த 3 நாள்களுக்குள் உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## நாட்டின் விவசாயத்தை அழிக்கும் ராஜபக்ச அரசு

### ஐ.ம.சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 9

'விவசாயிகளைப் பலப்படுத்துவோம், அபிவிருத்தி செய்வோம்' என்று கூறி ஆட்சிக்கு வந்த அரசு, தற்போது விவசாயிகளை முற்றாக அழித்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விவசாயிகள் விழும்போது கிராமிய அபிவிருத்தி முற்று முழுதாக வீழ்ச்சியடையும். மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச சகோதரர்களுக்கு வாக்களித்த 69 இலட்சம் பேரில் பெரும்பாலானோர் விவசாயிகள். தமக்கு வாக்களித்த அவர்களை ராஜபக்ச சகோதரர்கள் பழிவாங்குகின்றனர்.

வரவு- செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கே அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு அடுத்த படியாக வீதி அபிவிருத்திக்கே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சுகாதாரத்துக்கோ, கல்விக்கோ அவ்வளவாக நிதி ஒதுக்கப்படவில்லை- என்றார். (ம-4)

## மின் நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் உடன்படிக்கைக்கு எதிர்ப்பு வெளியீடு

### பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானம்

கொழும்பு, நவ. 9

யுகதனவி மின் நிலையத்தின், அரசுக்கு உரித்தான பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது என இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

குறித்த தகவலை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

எவருக்கும் தெரியாத இந்த உடன்படிக்கையை அரசு, நாட்டுக்கு வெளிப்படுத்தாவிட்டால், பணிப்புறக்கணிப்பை முன்னெடுப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என ஒன்றியத்தின் இணைப்பாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டால், பொதுமக்கள் அசௌகரியத்தை எதிர்நோக்க நேரிடும் இதனால் முன்னறிவித்தலின்றி பணிப்புறக்கணிப்புக்கு செல்லத் தயாரில்லை என ஒன்றிணைந்த தொழிற்சங்க ஒன்றியத்தின் இணைப்பாளர் தெரிவித்தார். (ய)

## தரமற்ற தேங்காய் எண்ணெயை மீண்டும் இறக்குமதிசெய்யத் திட்டம்

கொழும்பு, நவ. 9

வரிச்சலுகையைப் பயன்படுத்தி தரம் குறைந்த தேங்காய் எண்ணெயை நாட்டுக்குள் இறக்குமதி செய்வதற்குரிய முயற்சிகளை இறக்குமதியாளர்கள் முன்னெடுத்துள்ளனர் என அனைத்து இலங்கை தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் புத்திக டிசில்வா குற்றஞ்சுமத்தியுள்ளார்.

சந்தையில் தேங்காய் எண்ணெய்க்கு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி இலாபம் சம்பாதிப்பதற்கு முயல்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் மூலப்பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதியைக் கோரினோம். அரசு அதற்கான அனுமதியை வழங்குவதை தாமதிக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ய)

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
**ஒரு சதுர அடி - 45 ரூபா**

077 334 1281 (in 17809) (2.6)

**வேலையாள்கள் தேவை**

பொதி செய்யப்பட்ட பொருள்களினை கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு **விற்பனை பிரதிநிதி தேவை.**
சம்பளம் - 30 000/=

076 191 8214 (cs.41006) (2.6)

**வேலைக்கு ஆள் தேவை**

கேக் உள்ளீடுகள், எசன்ஸ் வியாபாரம் சம்பந்தமாக போதிய அறிவுடைய ஒருவர் வேலைக்கு உடன் தேவை அனுபவத்திற்கேற்ப தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு : 077 6280 685
(CS 17982 A) 1-6

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் புவேந்திரா இராஜக்கோன்**
(அரசாங்க மருந்தாளர்)

மலர்வு 01.09.1941 — உதிர்வு 09.11.2013

எங்கள் உயிரில் கலந்த உறவே !
இம்மையில் உங்களை நேசித்தோம்
மறுமையில் உங்களை மறவோம்.

குடும்பத்தினர்.

தபாற்கந்தோர் முன்பாக
ஏழாலை வடக்கு, ஏழாலை.

(cs 40989 ) (2.6)

## அரசாங்க அறிவித்தல்
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
## நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022

மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம் சார்பில் யாழ் மாவட்ட செயலக திணைக்களப் பெறுகைக் குழுவினால் யாழ் மாவட்ட செயலகம், மற்றும் யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2022ம் ஆண்டுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளை மேற்கொள்வதற்கும், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் வடபிராந்தியத்திலுள்ள நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை மாவட்டச் செயலக பெறுகை அலகு (அறை இல: 42), மற்றும் பிரதேச செயலகங்களில் 2021-11-09ந் திகதி தொடக்கம் 2021-12-09ந் திகதி வரை அலுவலக நேரத்தில் அல்லது WWW.jaffna.dist.gov.lk என்ற இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2021-12-09 திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் (9"x4" ) இடது பக்க மேல் மூலையில் **"நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022"** எனக் குறிப்பிட்டு "அரசாங்க அதிபர், பெறுகை அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் பெறுகை அலகில் (அறை இல:42) சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கட்டட நிரமாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விபரத்திற்கமையவும், ஏனைய வழங்குநர்கள் தொகுதி ஒன்றிற்கு ரூபா 500/= இனையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் பெயரில் உள்ள 7041946 எனும் இலக்க இலங்கை வங்கி கணக்கில் வைப்பில் இடப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் இப்பதிவுக்கட்டணத்தை செலுத்தத் தேவையில்லை. வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச் சிட்டை விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்களும் 2021-12-09 திகதிக்கு முன்னர் கிடைக்கபடாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

| ஒப்பந்த தொகை | பதிவுக் கட்டணம். |
|---|---|
| ரூபா 2,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 2,000 |
| ரூபா 2,000,000க்கு அதிகமானதும் ரூபா 5,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 3,000 |
| ரூபா 5,000,000க்கு அதிகமானதும் ரூபா 10,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 5,000 |

### பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளின் தொகுதி விபரம்

**பொருட்கள்**

- காகிதாதிகள், எழுதுகருவிகள், மற்றும் பாடசாலை உபகரணங்கள்.
- கணினிகள், அச்சிடும் உபகரணங்கள், தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்.
- அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள் பிளாஸ்ரிக் பெயர் பலகைகள், மற்றும் அலுவலக அடையாள அட்டைகள்.
- இலத்திரனியல் மின்சாரப் பொருட்கள் மற்றும் மின் உபகரணங்கள்.
- இயந்திரங்களும் அதன் உதிரிப்பாகங்களும்.
- மோட்டார் வாகனங்களின் உதிரிப்பாகம்
- விளையாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள்
- காலை, மதிய, இரவு, உணவு மற்றும் சிற்றுண்டி வகைகள்.
- பலசரக்கு, சுத்திகரிப்பு பொருட்கள் மற்றும் உபகரணங்கள்.
- அழகு சாதனப் பொருட்கள், பிளாஸ்ரிக், தோல் உற்பத்திகள் மற்றும் சமையல் உபகரணங்கள்
- கட்டிட நிர்மாண மற்றும் திருத்த வேலைகளுக்கான மூலப்பொருட்கள்
- துணி வகைகள்
- தளபாடங்கள்
- விவசாயப் பொருட்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள்.
- மீன் பிடி உபகரணங்கள்
- மருந்துப் பொருட்களும் உபகரணங்களும்.
- சூரிய மின்கலங்கள் மற்றும் திருத்தங்கள்
- நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்

**வேலைகள்**

- கட்டிடங்கள்,
- வீதிகள்
- பாலங்கள்

**சேவைகள்**

- சுத்திகரிப்பு சேவை
- பாதுகாப்பு சேவை
- பந்தல் மற்றும் அலங்காரம், ஒலி, ஒளி சேவை
- படப்பிடிப்பு சேவை
- குளிரூட்டிகள், வளிபதனாக்கிகள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- போட்டோ பிரதி இயந்திரங்கள், கணினி இயந்திரங்கள், கணினி அச்சியந்திரங்கள், கணினி வலையமைப்பு முறைமை, உள்ளக தொலைபேசி அமைப்பு, CCTV திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- வாடகைக்கு மற்றும் குத்தகைக்கு வாகனம் வழங்கல்
- இலத்திரனியல், மின்சாரப் பொருட்கள், உதிரிப்பாகங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- வாகனம் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- தளபாடங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல்
- ஏனைய சேவைகள்.

**தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு,
மாவட்ட செயலாளருக்காக,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

(cr.35840)(2.6)

### தரகுப் பணத்துக்கு ஆசைப்பட்டு

# தனியாரிடம் போத்தல் கள்ளை வாங்கினால் கடும் நடவடிக்கை!

### ப.தெ.வ.கூ.சங்கங்களுக்கு வடக்கு கூட்டுறவு ஆணையாளர் அறிவுறுத்து

**முல்லைத்தீவு, நவ.09**



**பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது கிளை நிலையங்களூடாக அங்கத்தவர்களால் உற்பத்தி செய்யப்படும் கள், பதநீரை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்.**

கள் கிடைக்காத காலங்களில், போத்தலில் கள் அடைக்கும் உற்பத்தியில் ஈடுபடும் ப.தெ.வ. கூட்டுறவுச் சங்கங்களிடம் இருந்தே போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளை கொள்வனவு செய்து விற்கலாம். மாறாக அங்கத்தவர்களின் நலன்களை கருத்திற் கொள்ளாமல், ஏதேனும் தனியார் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்பட்ட போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்ய ஆர்வம் காட்டும் சங்கங்களுக்கெதிராக உரிய அதிகாரிகளூடாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் - இவ்வாறு வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் மு.நந்தகோபாலன் தெரிவித்தார்.

வட மாகாணத்தின் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், செயலாளர், பொதுமுகாமையாளர் ஆகியோருடன்ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலிலேயே வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் மேற்படிவிடயத்தை தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

" சில சங்கங்கள் தரகுப்பணத்துக்கான , கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளை கொள்வனவு செய்யாமல், தனியார் நிறுவனங்களின் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளை வாங்கி, விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது கூட்டுறவுக் கொள்கைக்கு முரணான செயற்பாடு. அத்துடன் அவ்வாறு தனியாரால் தயாரிக்கப்படும் போத்தலில் அடைக்கப்பட்டகள் உடலுக்குத் தீங்கான இரசாயனச் சேர்க்கைகள் கொண்டது எனவும் குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது. எனவே இது குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகளும் கவனமெடுக்க வேண்டும். இனிமேல் அவ்வாறு தரகுப் பணத்துக்கு ஆசைப்பட்டு, தனியாரால் போத்தலில் அடைக்கப்படும் கள்ளை விற்பனை செய்தால், அவர்களின் கள் விற்பனை அனுமதிப்பத்திரத்தை ரத்துச் செய்வது பற்றியும் ஆலோசிக்கவேண்டிவரும்" என்று தெரிவித்தார்.

இந்தக்கலந்துரையாடலில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர், முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் , கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என்போரும் கலந்து கொண்டிருந்தனர். (த)

## வடமராட்சியில் கரையொதுங்கும் கோடிக்கணக்கான கடல்வாழைகள்



யாழ்ப்பாணம், நவ. 9

'கடல்வாழை' என்று கூறப்படும் ஒரு வகையான செடிகள் வடமராட்சி கடற்பரப்பில் நேற்று அதிகாலை தொடக்கம் ஆயிரக்கணக்கில் கரையொதுங்கி வருகின்றன என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இவை இந்தியாவிலிருந்து கடல் நீரோட்டத்துடன் வந்து இங்கு கரையொதுங்குகின்றன என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

தாழமுக்கம் ஏற்பட்டு மழை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், கடல் வாழைகள் வேருடன் கரையொதுங்குகின்றன. (கு-26)

**வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு**

காரைநகர், களபூமி 5 அறைகள் நாற்சார் வீட்டுடன் கூடிய 18 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 1726 051

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## குற்றம் கூறலும் வழிப்படுத்தலும்

கொரோனாத் தடுப்பூசி அட்டைகள் வைத்திருப்பவர்களே பொது இடங்களில் நடமாட முடியும் என்ற கட்டுப்பாட்டைக் கொண்டுவருவது தொடர்பாக இலங்கை அரசு ஆராய்கின்றது. சட்டத்தின் அடிப்படையில் இதை நடைமுறைப்படுத்த முடியும் என்று சட்டமா அதிபர் ஒப்புதல் தந்துள்ளார் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியிருக்கிறார்.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த தடுப்பூசிகள் ஏற்றிக்கொள்வது அவசியமானது. பல்வேறு நாடுகளும் மக்களுக்குத் தடுப்பூசி வழங்கி, கொரோனாத் தொற்றை ஓரளவுக்குக் கட்டுப்பாடுக்குள் கொண்டு வந்திருக்கின்றன, உயிரிழப்புக்களையும் குறைத்துள்ளன. சில ஐரோப்பிய நாடுகளில் தடுப்பூசி அட்டைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசும் கொரோனாத் தடுப்பூசி வழங்கலில் உலக நாடுகளின் பட்டியலில் முன்னிலையில் இருக்கின்றது. நாட்டில் குறிப்பிடத்தக்க சத வீதத்தினர் தடுப்பூசியின் இரு டோஸ்களையும் ஏற்றிக்கொண்டுள்ளனர். தடுப்பூசி பெறாதிருப்பவர்களுக்கு, தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. தடுப்பூசி வழங்கலில் அரசு எடுத்துக்கொண்ட முனைப்பு உண்மையில் பாராட்டுக்குரியதே.

ஆயினும் நாட்டு மக்களில் ஒரு தொகுதியினர் தடுப்பூசி பெறாது பின்னடிப்பதற்கு, அரசு மக்களை மட்டும் குற்றஞ்சாட்டுவது பொருத்தமற்றது. தடுப்பூசி ஏற்றிக் கொள்வதில் பொதுமக்களுக்கு உள்ள பிரச்சினைகள் சிக்கல்களை அரசோ, அதிகாரிகளோ கருத்தில் எடுக்கவில்லை– அறிந்துகொள்ள முயலவில்லை என்பதே இங்குள்ள பிரச்சினை.

இலங்கையில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் ஏனைய நாடுகளைப்போன்று நடக்கவில்லை. ஏனைய நாடுகளில் மக்களின் விருப்பத் தெரிவாகப் பல தடுப்பூசி வகைகள் இருந்தன. ஆயினும் இலங்கையில் சீனத் தயாரிப்பான சினோபார்ம் தடுப்பூசி மட்டுமே பொதுமக்களுக்கு பெரும்பாலும் வழங்கப்பட்டது. அட்ஸ்ராசெனகா, பைஸர், மொடேர்னா போன்ற தடுப்பூசிகள் வழங்கப்பட்டாலும், அவை தெரிவு செய்யப்பட்ட அல்லது அரச அனுசரணை பெற்ற நபர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டனவே தவிர, அனைவரும் அவற்றைப் பெற்றுக்கொள்ளும்படியாக இருக்கவில்லை.

சினோபார்ம் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளத் தயங்குபவர்கள் பெரும்பாலும், வெளிநாடுகளுக்குப் பயணம் செய்ய வேண்டிய தேவையுடையவர்களே. பல நாடுகள் சினோபார்ம் தடுப்பூசிகளை ஏற்றுக்கொள்ளாத நிலையில், மக்களின் தயக்கமும் நியாயமானதே. சினோபார்ம் தடுப்பூசியை அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொள்ளும் என்று இலங்கை அதிகாரிகள் கூறியிருந்தபோதும், தற்போது தொழில் நிமித்தம் அரேபிய நாடுகளுக்குச் செல்வோர் கூட பைஸர் அல்லது அட்ஸ்ராசெனகா பூஸ்டர் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பொதுமக்களின் தயக்கத்துக்கான காரணத்தை அறிந்து கொள்வதிலோ அல்லது அது தொடர்பான விளக்கங்களை வழங்குவதற்கோ உரிய ஏற்பாடுகள் எவையும் அரசிடம் இல்லை. வெளிநாடு செல்லும் தேவையுடையோர் அல்லது விரைவில் வெளிநாடு செல்லக் காத்திருப்போர் தமக்குரிய தடுப்பூசி வகைகளை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் என்பது தொடர்பாக எந்த விழிப்புணர்வும் மக்களுக்கு வழங்கப்படுவதில்லை. தடுப்பூசி வழங்கலில் ஈடுபடும் சுகாதாரத் தரப்பினரும், சரியான விளக்கத்தைக் கொடுப்பதில்லை.

தடுப்பூசிகளை ஏற்றி, கணக்குக் காட்டினால் மட்டும் போதும் என்ற நோக்குடனேயே அரசு செயற்படுகின்றது. தடுப்பூசி ஏற்றிக்கொள்வதில் மக்களுக்கு உள்ள பிரச்சினைகளை, தயக்கத்தை அறிந்து அவற்றுக்குரிய தீர்வுகளை வழங்கி, தடுப்பூசி ஏற்றிக்கொள்ள ஊக்குவிக்க வேண்டும். அதை விடுத்து மக்களுக்கு நெருக்கடி கொடுத்து, வற்புறுத்தி தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள வைப்பது சரியான வழியன்று.

பொதுமக்களுக்கு உரிய வழிகாட்டுதல்களை அரசும், அதிகாரிகளும் வழங்க வேண்டும். மக்களின் தேவைக்கேற்ற விருப்பத் தெரிவுகளை வழங்கி, அவர்களுக்குரிய தடுப்பூசிகளை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் வழிப்படுத்த வேண்டும். அதை விடுத்து, மரத்தில் இருந்து விழுந்தவனை மாடேறி மிதிப்பது போன்று நடக்கக் கூடாது....!




### பேருந்துச் சேவை நிறுத்தம்

# உழவியந்திரங்களில் பயணித்து பணிக்குச் சென்ற ஆசிரியர்கள்!

### கடல் வழியாகப் பயணிக்க இன்று ஏற்பாடு

**கிளிநொச்சி, நவ. 9**

**கிளிநொச்சி - பூநகரி, விநாசியோடை அ.த.க. பாடசாலைக்கு உழவு இயந்திரங்களில் ஆசிரியர்கள் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது என்று கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்:

பாடசாலைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன. பூநகரி பரமன்கிராய் சந்தியில் இருந்து விநாசியோடை பாடசாலை வரையான வீதி சேதமடைந்த நிலையில், பேருந்து சேவைகள் இடம்பெறவில்லை. இதனால் ஆசிரியர்கள் உழவு இயந்திரத்திலேயே பாடசாலைக்கு சென்றனர். நாளை (இன்று) பூநகரி பிரதேச செயலாளரின் ஒழுங்குப்படுத்தலில் படகுமூலம் சங்குப்பிட்டிப் பாலத்தில் இருந்து ஆசிரியர்கள் விநாசியோடை பாடசாலைக்கு கடல் வழியாகப் பயணிக்க உள்ளனர்.

கௌதாரிமுனை, விநாசியோடை ஆகிய கிராமங்களுக்கு நடைபெற்று வந்த இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை ஏன் நிறுத்தப்பட்டுள்ளது என இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி கிளை முகாமையாளர் வை. கிருஸ்ணகுமாரிடம் கேட்டபோது, 'கௌதாரிமுனை வீதியில் வாகனங்கள் புதையக் கூடிய வகையில் களிமண் பரவப்பட்டுள்ளது. மழை நேரத்தில் பேருந்துகள் தொடர்ந்து வீதியில் புதைவதால் பேருந்து சேவை நிறுத்தப்பட்டுள்ளது' என்று தெரிவித்தார். (ம-13)

### மன்னாரில்

# சமூகத் தொற்றாளர்களை கண்டறிவதற்குத் திட்டம்!

மன்னார், நவ. 9

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று தற்பொழுது நாளுக்குநாள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து நோயாளர்களை சமூகத்திலிருந்து கண்டறிவதற்காக மன்னார் சுகாதார சேவைகள் திணைக்களம் மீண்டும் வீதிகளில் இறங்கி பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளை ஆரம்பிக்கத் தொடங்கியுள்ளது.

கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட ஒன்றிணைந்த வேலைத்திட்டங்களின் விளைவாக மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று கட்டுக்குள் வைக்கப்பட்டிருந்தது. ஆனால், கடந்த மூன்று வாரங்களாக மன்னாரில் கொரோனா அதிகரித்து வருகின்றது. இதையடுத்தே சமூகத்துக்குள் இருக்கும் தொற்றாளர்களைக் கண்டறிவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

முதல் கட்டமாக நானாட்டானில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் 6 பேர் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர். 50 பேருக்கு முன்னெடுத்த சோதனையிலேயே 6 பேர் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர். ஏனைய பகுதிகளிலும் இவ்வாறான சோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ம-60)

நவம்பர் 2021

**வடமாகாண மரநடுகை மாதம்**



"எவரொருவர் ஒரு மரத்தை நடுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நடுபவர் ஆவார்"

– லியூசி லார்கோம்

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** கணவன், மனைவி இடையே இருந்த கருத்து வேறுபாடுகள் தீரும். சொத்து விடயங்களில் கவனமாக முடிவெடுப்பது நல்லது. எதிலும் நிதானம், கவனம் தேவை. பணம் வர வாய்ப்புள்ளது.

**இடபம்:** முக்கிய விஷயங்களில் குடும்பத்தினருடன் கலந்து ஆலோசிப்பீர்கள். பிரச்சினைகள் தீரும். திருமண விஷயமாக நல்ல செய்தி ஒன்று வந்து சேரும்.

**மிதுனம்:** திட்டம் ஒன்று வெற்றிகரமாக நிறைவேறும். தைரியம் கூடும். சொத்து சம்பந்தமாக வாரிசுதாரர்களிடையே உடன்பாடு உண்டாகும். சிறப்பாகச் செயற்படுவீர்கள்.

**கடகம்:** முன்பு தடைப்பட்ட நல்ல விடயம் ஒன்று இன்று நிறைவேறும். சொத்து வாங்குவது சம்பந்தமாக நல்ல முடிவுகள் வரும். உங்களைக் கண்டு கொள்ளாமல் இருந்த உறவுகள் உதவி கேட்டு வருவர்.

**சிம்மம்:** மருத்துவ சிகிச்சையில் இருப்பவர்கள் நல்லமுறையில் குணமடைவர். பேச்சில் கவனம் தேவை. உங்கள் மீது பழிவராமல் காத்துக்கொள்ளுங்கள். பொறுப்பை உணர்வீர்கள்.

**கன்னி:** நல்ல காரணங்களுக்காக இன்று வெளியூருக்கு செல்வீர்கள். வீடு, நிலம் வாங்குவீர்கள். அழகுணர்ச்சி அதிகரிக்கும். வெளிநாட்டில் வேலைபார்ப்பவர்களுக்கு நல்ல செய்தி வரும்.

**துலாம்:** அதிகாரப்பதவியில் இருப்பவர்களின் உதவி கிடைக்கும். சுய தொழில் தொடங்கும் முயற்சியில் இன்று ஈடுபடுவீர்கள். நடக்குமா என்று கவலைப்பட்ட விடயம் சாதகமாக கூடி வரும்.

**விருச்சிகம்:** எதிலும் சாதகமான நிலை இருக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நீங்கள் முயன்ற வேலை சம்பந்தமாக நல்ல செய்தி வரும். மற்றவர்களின் ஒத்துழைப்புக் காரணமாக வெற்றி பெறுவீர்கள்.

**தனுசு:** அலுவலக விஷயங்களில் யாருடனும் விவாதம் செய்ய வேண்டாம். சிலருக்கு வங்கி, அரசாங்கப் பணி கிடைக்கும் யோகம் உள்ளது. பதவி உயர்வு சம்பந்தமாக மகிழ்ச்சியான செய்தி வரும்.

**மகரம்:** மகிழ்ச்சி கூடும். கலைத்துறையினர் நல்ல பலன் காண்பர். குடும்ப மகிழ்ச்சி சீராக இருக்கும். நட்பு வட்டம் விரிவடையும். உங்களின் பயணங்கள் இலாபமாக அமையும். கலை ஆர்வம் உண்டாகும்.

**கும்பம்:** உங்கள் மீது யாரும் கோபப்பட முடியாத அளவு நடந்து கொள்வீர்கள். கவலை தீரும். பணவரவு இருக்கும். பயணம் செல்ல வேண்டியிருக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். வீண்பழி நீங்கும்.

**மீனம்:** மனக்குறை நீங்கும். சண்டைகள் தீர்ந்து சமாதானமாகும். செலவினம் மகிழ்ச்சி அளிக்கும். குழந்தைகளால் நன்மை ஏற்படும். கவலை ஏதுமின்றி ஆர்வமுடன் முன்னேற்றப் பாதையில் செல்வீர்கள்.

இந்தியாவில்

# வெளுத்து வாங்கும் கனமழை; மக்கள் வெள்ளத்தில் தத்தளிப்பு

## முதலமைச்சர் நேரில் சென்று பார்வையிட்டார்

சென்னை, நவ.9

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் கடந்த சில நாள்களாக இடைவிடாது கனமழை பெய்து வருகின்றது. அத்துடன் தாழ்வான பகுதிகள் மற்றும் சாலைகள் என அனைத்தும் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன.



பல இடங்களில் வீடுகளுக்குள் மழைநீர் புகுந்துள்ளது. சில பகுதிகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால், மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் நிவாரண உதவிகளை வழங்கியுள்ளார்

அத்துடன் வெள்ள மீட்புப் பணிகளை விரைவுபடுத்துமாறும் அதிகாரிகளுக்கு முதலமைச்சர் பணித்துள்ளார்.

இந்த நிலையில் கனமழை காரணமாக பாடசாலைகளுக்கும் விடுமுறை விடப்படவுள்ளது எனவும் அரச அலுவலகங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. அத்தியாவசிய சேவை வழங்கும் துறைகள் தவிர்த்து அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# 33 இலட்சம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து பற்றாக்குறை

## மத்திய அரசு தகவல்

புதுடில்லி, நவ.9

இந்தியாவில் 33 இலட்சத்துக்கும் அதிகமான குழந்தைகள் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையால் அவதிப்படுகின்றனர் என மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கொரோனா சூழ்நிலை காரணமாக வறிய நிலையில் உள்ள ஏழைக்குடும்பங்களுக்கு சுகாதார வசதிகளும் ஊட்டச்சத்து உணவும் கிடைக்காமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 'போஷான் ட்ராக்கர்' என்ற செயலியில் 34 மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் பதிவு செய்த விவரங்களின் அடிப்படையில் இந்தத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 14ஆம் திகதி நிலவரப்படி நாட்டில் 1-6 வயது வரையான குழந்தைகளில் 33 இலட்சத்து 23 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாநில வாரியாக, மராட்டிய மாநிலம் 6 லட்சத்து 16 ஆயிரம் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையான குழந்தைகளுடன் முதலிடத்தில் உள்ளது. பீகார், குஜராத், ஆந்திரா, கர்நாடகா, உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

ஊட்டச்சத்து பற்றாக்குறை கொண்ட ஒரு லட்சத்து 78 ஆயிரம் குழந்தைகளுடன் தமிழ்நாடு 7ஆவது இடத்தில் இருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

எதிர்ப்பு எதிரொலி:

# ஜெய்பீம் படத்தில் அதிரடி மாற்றம்

சென்னை, நவ.9

சூர்யா நடிப்பில் ஓடிடி தளத்தில் வெளியாகி இருக்கும் படம் 'ஜெய் பீம்'. பழங்குடியின மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட இப்படம் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பு பெற்று வருகிறது. இதனிடையே, ஜெய் பீம் படத்தில் பழங்குடியினர்களை சித்திரவதை செய்யும் குருமூர்த்தி என்கிற பொலிஸ் கதாபாத்திரம் வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவர் போல் படத்தில் காட்டப்பட்டு உள்ளது எனவும் படத்தில் ஒரு காட்சியில் அவர் தொலைபேசியில் பேசும்போது பின்னணியில் வன்னியர் சங்க நாள்காட்டி இடம்பெற்றுள்ளது எனவும் எதிர்ப்புக் கிளம்பியது.

இதையடுத்து அந்தக் காட்சியில் படக்குழு மாற்றம் செய்துள்ளது. அந்த நாள்காட்டியில் வன்னியர் சங்க குறியீடுக்கு பதிலாக சாமி படம் இருப்பது போல் மாற்றி அமைத்து சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர். (ச-இ)

# விபத்தில் தூக்கிவீசப்பட்டவர் மின்கம்பியில் தொங்கிச் சாவு

சென்னை, நவ.9

நிலக்கோட்டை அருகே கார்- மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் தூக்கி வீசப்பட்ட வாலிபர், மின்கம்பியில் தொங்கியபடி உயிரிழந்துள்ளார்.

கண் இமைக்கும் நேரத்தில் நடந்த இந்தக் கோர விபத்தில் சினிமாவை மிஞ்சும் காட்சியைப் போல் மோட்டார் சைக்கிளில் இருந்து இருவர் தூக்கி வீசப்பட்டனர். அதில் ஒருவர் மின்கம்பி மீது பறந்து போய் தொங்கியதால் அவர் மீது மின்சாரம் பாய்ந்து சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார். (ச)



# உலக தலைவர்கள் பட்டியல்: மோடி மீண்டும் முதலிடம்!

புதுடில்லி, நவ 9

ஜோ பைடன் உட்பட 12 தலைவர்களை பின்னுக்குத் தள்ளி உலகத் தலைவர்கள் பட்டியலில் பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார்.

'மார்னிங் கன்சல்ட் பொலிடிக்கல் இன்டெலிஜன்ஸ்' என்ற உலகளாவிய கருத்துக் கணிப்பு நடத்தும் அமைப்பு, 13 நாடுகளின் தலைவர்களிடையே மக்களால் விரும்பப்படுகிற, மிகவும் பிரபலமான உலகத் தலைவர் யார் என்று கருத்துக் கணிப்பு நடத்திவருகிறது.

அதில், 70 சதவீத ஆதரவுடன் பிரதமர் மோடி முதலிடம் பெற்றுள்ளார். (ச-இ)



## வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 9

சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற ஜீப் விபத்துக்குள்ளானது. அதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் 9 பேர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்து பொலநறுவை ஹபரணையில் அமைந்துள்ள வனவிலங்கு சரணாலயத்தில் இடம்பெற்றது. காயமடைந்த நபர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம-ரி1)

## விபத்துக்களில் இருவர் சாவு!

கொழும்பு, நவ. 9

இரு வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளனர். கொழும்பு, பேலியாகொட பியகம பேதியாகொட பிரதேசத்தில், பியகம நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று, பாதசாரி ஒருவர் மீது மோதியதில், பாதசாரி உயிரிழந்துள்ளார். பம்பலப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த (வயது- 44) நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, அநுராதபுரம், கவரக்குளம் வீதியில், லொறியொன்றும் சிறிய ரக லொறியொன்றும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளாகின. அதில் சிறிய ரக லொறியின் சாரதி உயிரிழந்தார். அநுராதபுரம், மஹபலாடிகுளம் பிரதேசத்தைச் சேர்ந்த (வயது - 44) நபரே உயிரிழந்துள்ளார் - என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4-22)

## ரயில் விபத்தில் இளைஞர் சாவு

கொழும்பு, நவ.9

கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த ரயிலில் மோதி இளைஞன் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

முள்ளிப்பொத்தானை 95ஆம் கட்டை சதாம் நகரை சேர்ந்த, ஹமீத் முபீத் (வயது-30) என்பவரே உயிரிழந்துள்ளார். விபத்துக்குள்ளானவர் 'ஹெட்போன்' அணிந்திருந்தமையால் அவருக்கு ரயில் வரும் சத்தம் கேட்காமையால் நண்பர்கள் அவரைக் காப்பாற்ற ஓடியபோதும் ரயில் வேகமாக வந்து அவரை மோதியுள்ளது என நண்பர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## மின்சாரம் தாக்கி மாணவன் சாவு

கொழும்பு, நவ. 9

ரவுட்டருக்கு மின்னிணைப்பை ஏற்படுத்த முயன்ற பாடசாலை மாணவன் ஒருவர் மின்சாரம் தாக்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பதுளை, லுனுகலை அலகொல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. அலகொல்ல, லுனுகல பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயது மாணவனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-4-22)

# மோசடியாளரிடம் ஏமாற வேண்டாம்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் எச்சரிக்கை

**கொழும்பு, நவ. 9**

**வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுத்தருவதாகக்கூறும் மோசடியாளர்களை நம்பி ஏமாற வேண்டாம் என்று இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் எச்சரித்துள்ளது.**

இவ்வாறான மோசடிகள் தொடர்பில், 1989 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத்தொடர்புகொண்டுபொது மக்கள் தகவல் வழங்க முடியும். தென்கொரியாவில் வேலைவாய்ப்புக்கான ஆள்சேர்ப்பு மற்றும் பயிற்சி ஆகியன வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் வேலைவாய்ப்பு அரச ஆள்சேர்ப்பு பணியகம் மற்றும் பல உரிமம் பெற்ற வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களால் இரு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தின்படி மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றது. அதேவேளை, இரு நாடுகளுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இஸ்ரேலில் வேலை வாய்ப்புக்கான ஆள்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

இதுதவிர, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான விண்ணப்பங்களை ஏற்க, வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் அமைச்சு அல்லது பணியகம்மூலம் வேறு எவரும் நியமிக்கப்படவில்லை என்றும் பணியகம் தெரிவித்துள்ளது. (ம-4)

## இடருக்கு முகங்கொடுக்க மத்திய நிலையம் தயார்

கொழும்பு, நவ. 9

இனிவரும் தினங்களில் ஏற்படக்கூடிய எந்தவொரு வானிலை இடருக்கும் முகங்கொடுப்பதற்கும் மத்திய நிலையம் தயாராக இருப்பதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையப் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் எந்தப் பகுதியிலும் இடர் நிலைமை ஏற்பட்டால் இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் 24 மணி நேர சேவையான 117 என்ற துரித தொலைபேசி இலக்கத்துக்குத் தெரிவிக்க முடியும் - என்றார். (ம-ரி1)

## பொலிஸார் மீது தாக்குதல்: 9 பேர் கைது

கொழும்பு, நவ. 9

அநுராதபுரம் - கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தில் ஹெரோய்ன் போதைப்பொருள் தொடர்பில் சோதனைக்குச் சென்ற பொலிஸார் மீது பிரதேசவாசிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான இரண்டு பொலிஸார் அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் 6 பெண்கள் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த பகுதியில் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்ய முற்பட்டவேளை, பிரதேசவாசிகளால் பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



## மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 9

பதுளை, காலி, களுத்துறை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கமைய பதுளை மாவட்டத்தில் எல்ல, பசறை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும், காலியில் நாகொட, பத்தேகம, நெலுவை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும், களுத்துறையில் அகலவத்தை, புளத்சிங்கள ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும், கண்டியில் யட்டிநுவர, பஸ்பாகே கோரள, கங்காவத்தை கோரள, உடுநுவர, தொலுவ, ஹரிஸ்பத்துவ, உடபலாத்த ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும், கேகாலையில் யட்டியாந்தோட்டை, அரநாயக்க, புளத்கொஹுபிட்டி, கேகாலை, ருவன்வெல்ல, ரம்புக்கனை, மாவனெல்ல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும், குருநாகலில் மல்லவப்பிட்டி மற்றும் மாவத்தகம ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும், மாத்தளையில் ரத்தோட்டை மற்றும் உகுவெல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும், இரத்தினபுரியில் கலவான மற்றும் குருவிட்ட ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-இ)

## வெட்டுக்காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, நவ. 9

குருநாகல், ஹெட்டிபொல கோன்வெள பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து, தலையில் வெட்டுக்காயங்களுடன் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மடங்பொல பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயது நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று ஹெட்டிபொல பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த நபர் வீட்டில் தனிமையில் வசித்து வந்தவர் என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். அந்த நபர் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம-4-22)

## போலிச் சான்றிதழ் வழங்கிய பெண் அதிகாரி கைதானார்

கொழும்பு, நவ. 9

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் பெண் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் குறித்த பெண் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. 3 மோட்டார் சைக்கிள்களின் பதிவுச் சான்றிதழ்களைப் போலியாக அச்சடித்துக் கொடுத்தமை தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-இ)

### கடும் காற்றுடன் கடல் கொந்தளிப்பு

# கிளிநொச்சி மீனவர்களின் வாழ்வாதாரங்கள் பாதிப்பு

### உதவ வேண்டுமென அவர்கள் கோரிக்கை



**கிளிநொச்சி, நவ. 9**
**கிளிநொச்சியில் கடும் மழையுடனான கால நிலையாலும் கடல் கொந்தளிப்பாலும் பல மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.**



வலைப்பாடு, பள்ளிக்குடா, இரணைமாதாநகர் போன்ற பகுதிகளில் கடல் கொந்தளிப்புக் காரணமாக பல படகுகள் பகுதியளவிலும் சில படகுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. அத்துடன் வலைகளும் கணிசமாகச் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மீனவர்கள் மேலும் தெரிவிக்கையில், கடும் காற்றும் கடல் கொந்தளிப்பும் நிலவுவதன் காரணமாக கரையோரங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பல படகுகள் சேதமடைந்துள்ளன. எமது வாழ்வாதாரம் பெரியளவில் பாதிக்கப்பட்டபோதிலும், எந்தவொரு அதிகாரிகளும் எம்மைச் சந்திக்கவோ அல்லது இழப்பீடுகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவோ இல்லை. தற்போது நாம் நிர்க்கதியான நிலையில் நிற்கின்றோம். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமக்கு உதவிகளையும் இழப்பீடுகளையும் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ம)

## பேசாலை மருத்துவமனைக்கு மின்பிறப்பாக்கி வழங்கப்பட்டது




மன்னார், நவ. 9
பேசாலை பிரதேச மருத்துவமனைக்கு உலக வங்கியின் நிதியுதவி திட்டத்தின் கீழ் 60 கே.டபிள்யூ வலுவுடைய மின்பிறப்பாக்கி கையளிக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் அடிக்கடி ஏற்பட்டுவரும் மின்சாரத் தடையால் குறித்த மருத்துவமனை பெரும் சிரமத்தை எதிர்கொண்ட நிலையில், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் மேற்கொண்ட நடவடிக்கையால் இந்த மின் பிறப்பாக்கி கையளிக்கப்பட்டது. (ம-60)



## 'சுகம் பேணும் நிலையம்' திறப்பு

யாழ்ப்பாணம், நவ.9
மூளாய் கூட்டுறவு மருத்துவமனையின் 'சுகம் பேணும் நிலையத்தின்' கிளை வட்டுக்கோட்டை ஆத்திபடி பிள்ளையார் கோவிலுக்கு அருகில் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.
மூளாய் கூட்டுறவு மருத்துவமனை சங்கத் தலைவர் மா.ஞானேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சிறிசற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கிளை மருத்துவமனையைத் திறந்து வைத்தார்.
மருத்துவமனையில் தினமும் காலை 7 மணி தொடக்கம் முற்பகல் 10 மணிவரை மற்றும் மாலை 4 மணி தொடக்கம் இரவு 7மணிவரை இலவசமாக நீரிழிவுப் பரிசோதனை, குருதிப் பரிசோதனை மற்றும் இலவச மருத்துவ ஆலோசனைகள் என்பவை மருத்துவ நிபுணர்களால் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சு- 27)

## 'நீம்' அமைப்பின் ஆண்டு நிறைவு

வவுனியா, நவ.9
'தேவைகருதிய பொருளாதார மற்றும் சுற்றாடல் அமைப்பின்' (நீம்) முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்வு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.
இதன்போது கடந்த ஒரு வருடகாலத்தில் 'நீம்' அமைப்பால் முன்னெடுக்கப்பட்ட சமூக வாழ்வாதாரப் பணிகள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டதுடன், எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.
நிகழ்வில் பல்துறைசார்ந்தோர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் நினைவுச்சின்னங்களும் வழங்கப்பட்டன.
நிகழ்வில் 'நீம்' அமைப்பின் செயலாளர் க.சுவர்ணராஜா, இயக்குநர்களான எ.நாகேந்திரன், கே.கந்தையா, எஸ்.சுகேந்திரன் மற்றும் அமைப்பின் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (சு -110)







## இராஜாங்க அமைச்சர் விதுர யாழ்.பல்கலைக்குப் பயணம்

### தொல்லியல் துறை தொடர்பில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கடந்த சனிக்கிழமை சென்று கலந்துரையாடியுள்ளார்.
யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல்துறை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுடன் இராஜாங்க அமைச்சர் கலந்துரையாடினார்.
கலந்துரையாடலின்போது, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் துறை தொடர்பிலும் அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடியதுடன் தொல்லியல் துறையின் அருங்காட்சியகம் மற்றும் தொல்லியல் ஆய்வுகூடத்தையும் இராஜாங்க அமைச்சர் பார்வையிட்டார். நிறைவில் இலங்கை தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்கவால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்துக்கு நூல் ஒன்றும் அன்பளிப்பு செய்யப்பட்டது. (ச)

## விவசாயப் பணிப்பாளர் ஓய்வு

மன்னார், நவ.9
மன்னார் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் எம்.எச்.சுக்கூர் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.
சுக்கூர் 1980 ஆண்டு கால்நடை அபிவிருத்தி போதனாசிரியராக முதல் நியமனம் பெற்றார். 1981 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் விவசாயப் போதனாசிரியராகவும், 2000 ஆம் ஆண்டில் இருந்து 2016 ஆம் ஆண்டு வரை புத்தளம், மன்னார், குருநாகல் மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் விவசாயப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.
2018 ஆம் ஆண்டு மீள் நியமன அடிப்படையில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளராக மன்னார் மாவட்டத்தில் பதவியேற்றார். இவர் விவசாயப் பயிற்சிகளுக்காக பங்களாதேஷ், தாய்லாந்து, பாகிஸ்தான் மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளுக்கும் பயணித்துள்ளார். (ஓ-4,213)

## பதில் பணியாளர்களாக தொடர்வதற்கு விருப்பம்

யாழ்ப்பாணம், நவ. 9
யாழ்ப்பாணம் தபால் நிலையத்தில் பதில் பணியாளர்களாகத் தொடர்வதற்கு ஆவன செய்யவேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் யாழ்ப்பாணம் தபால் நிலையத்தில் பதில் பணியாளர்கள் கடந்த 5ஆம் திகதி கோரிக்கை விடுத்துள்ளனர்.
கடந்த நான்கு வருடங்களாகப் பதில் பணியாளர்களாகப் பணியாற்றிவரும் அவர்கள், தொடர்ந்தும் பதில் பணியாளர்களாகத் தொடர்வதற்கு விருப்பம் வெளியிட்டுள்ளதுடன் வேறு துறைகளுக்குத் தம்மை இடமாற்றம் செய்யக்கூடாது என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடுவேன் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம)

*2 டோஸ்...*

யான அனுமதி கிடைத்துள்ளது. அது விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சட்டமா அதிபரால் இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுக்கருத்துத் தெரிவிக்கும்போது, சுகாதார அமைச்சின் ஊடாக தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் செலுத்திக் கொண்டமைக்கான செயலி (அப்ஸ்) ஒன்றை தயாரிக்கவுள்ளோம். குறித்த செயலி இல்லாதவர்கள் பொது இடங்களுக்கு செல்லத் தடை விதிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து-இ)

*யாழில்...*

குடும்பங்களைச் சேர்ந்த 7 பேரும், ஜே/04 கிராம அலுவலர் பிரிவில் ஒருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஜே/427 கிராம அலுவலர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சங்கானை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஜே/ 171கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 17பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பகுதியில் தோன்றியுள்ள தாழமுக்கம் இன்றுதொடக்கம் வடக்கு வடமேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் நாளை தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரையான காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பெரும்பாலான பகுதிகளில் மிகக் கன மழை கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்றுஎதிர்வுகூறப்பட்டுள்ளது.

(மற்றொரு செய்தி 3ஆம் பக்கம்)(து-26)

*கடற்படைக்கு..*

யால், திணைக்களத்தினர் அந்தந்தப் பகுதிகளில் மேற்கொள்ளவிருந்த அளவீட்டை மேற்கொள்ளாமல் திரும்பிச்சென்றனர்.

அவர்கள், மக்களைத் திசைதிருப்பும் வகையில், வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு வாகனங்களில் தனித்தனி குழுவாக வருகைதந்து ,வேலணை பிரதேச செயலர் பிரிவிலுள்ள அல்லைப்பிட்டி 2ஆம் வட்டாரம், மண்கும்பான், புங்குடுதீவு 9ஆம் வட்டாரம் வல்லவன் கிராமம் போன்ற பகுதிகளில் காணி அளவீடு செய்யவிருந்த நிலையில் பொதுமக்கள், காணி உரிமையாளர்கள், அரசியல்வாதிகளின் கடும் எதிர்ப்பால் நில அளவீட்டைக் கைவிட்டு திரும்பிச்சென்றனர்.

இந்த எதிர்ப்பு நிகழ்வுகளில், அந்தப் பகுதி மக்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தி.நிரோஸ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளர் க.சுகாஷ், வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சஜீவன், வேலணைப் பிரதேசசபை உறுப்பினர் ஞானேஸ்வரன், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, நில அளவைத் திணைக்களத்தினருக்கு காணி உரிமையாளர்களால் காணி உறுதி காண்பிக்கப்பட்டு மக்களுக்குச் சொந்தமான காணிகளை அளவீடு செய்யவேண்டாம் என்று கோரிக்கையும் விடப்பட்டது. (து-125)

*தடுப்பூசி...*

துக்கு மேற்பட்டவர்களை வீடுகள் கோவில்கள், திருமண மண்டபங்கள் போன்றவற்றில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு விருந்தினராகவோ அல்லது பங்குபற்றுநராகவோ அழைப்பதை முற்றாகத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

தடுப்பூசி ஏற்றாத பலர் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான ஏனைய சுகாதார நடைமுறைகளையும் சரிவரப் பின்பற்றாதவர்களாகவே அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

இவர்கள் முனைப்பான காவிகளாக தொழிற்பட்டு கொரோனா பரவல் அதிகரித்துச் செல்லக் காரணமாக இருக்கின்றனர். கொரோனாவால் உயிரிழப்பவர்களின் அதிகமானோர் தடுப்பூசி ஏற்றாதவர்களே என்பது ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டமையாலேயே உலகின் பலநாடுகள் தடுப்பூசி பெறாதவர்களை பொது இடங்களில் பிரவேசிப்பதை தடைசெய்து வருகின்றன. உலகின் பல நாடுகள் கொரோனாத் தடுப்பூசியின் பூஸ்டர் டோஸை மும்முரமாக செலுத்த தொடங்கிவிட்டனர். ஆனால், இங்கு இன்னமும் முதலாவது டோஸைக்கூட பெற்றுக் கொள்ளாமல் அடம் பிடிப்பவர்களை நிகழ்வுகளுக்கு அழைப்பதை தவிர்த்து, அவர்கள் இழைத்துவரும் தவறை உணர்ந்து கொள்ள சந்தர்ப்பம் அளியுங்கள்- என்று கோரியுள்ளனர். (து-159)

*தொற்று...*

னாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 45 ஆயிரத்து 935 ஆக எகிறியுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 312 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 15 ஆயிரத்து 495 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் மேலும் 19 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 19 சாவுகளில் 6 பெண்களும், 13 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்றும் அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய நாட்டில் பதிவான கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 875 ஆக உயர்வடைந்துள்ளது. (து-22)

# அரசுக்கு எதிராக போராட்டம்



கொழும்பு, நவ. 9

**அருட்தந்தை சிறில் காமினி மீது மேற்கொள்ளப்படவுள்ள விசாரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கொழும்பு உயர் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட அடிப்படை உரிமை மனு மீதான விசாரணை நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் அவருக்கு ஆதரவு தெரிவித்து, கொழும்பு மறை மாவட்ட அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள் மற்றும் பொதுமக்கள் சிலர் இணைந்து நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

அதன்போது, கத்தோலிக்க திருச்சபையின் கொழும்பு மறை மாவட்ட சமூக மற்றும் தொடர்பாடல் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த தெரிவிக்கையில்,

அரச தரப்பினர், தங்களையும் , தங்களது குடும்பங்களையும் மாத்திரம் பாதுகாத்துக்கொள்வதற்காக மாத்திரம் செயற்படலாகாது. அருட்தந்தை சிறில் காமினியை பாதுகாப்பதற்காக நாம் இங்கு ஒன்று கூடவில்லை. இந்தநாட்டின் தேசிய பாதுகாப்புக்காகவே ஒன்று கூடியுள்ளோம். உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலையடுத்து எமது நாடு அபாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பதையே நாம் தொடர்ந்தும் கூறி வருகிறோம். இதற்காக குரல் கொடுத்த அருட்தந்தை சிறில் காமினி அடிகளாரை வேட்டையாடும் நோக்கில் இந்த அரசாங்கம் செயற்பட்டுவருகிறது.

எமது அருட் தந்தையர்கள் மாத்திரமல்ல மதகுருமார்கள் மீதும் கைவைக்க வேண்டாம். அவர்கள் முன்நிற்பது உண்மையை கண்டறிவதற்காகவே தவிர, அரசியல் இலாபத்துக்காக அல்ல - என்று தெரிவித்தார். (து-இ)


**வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**
**பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள்,கருவாட்டுக்கடைகள்**
**என்பனகுத்தகைக்கு /வாடகைக்கு விடுவதற்கான**

**மீள் கேள்வி அறிவித்தல் 2022**

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித்திகதி :- 19.11.2021 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும இறுதித் திகதி :- 19.11.2021 வெள்ளிக்கிழமை பி .ப 02.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 19.11.2021 வெள்ளிக்கிழமை பி .ப 02.30 மணி

| இல | குத்தகைவிபரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| மல்லாகம் உப அலுவலகம் | | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 53,295.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி ஆட்டிறைச்சிக்கடை இல – 07 | 1,500.00 | 23,130.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக்கடை | 1,000.00 | 10,450.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | மல்லாகம் பொதுச்சந்தை | ...... | 115,140.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 2,750.00 | 105,020.00 | 1,000.00 | 1,000.00 |
| 06 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 2,750.00 | 556,320.00 | 10,000.00 | 1,000.00 |
| 07 | இறால்மடம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 1,250.00 | 513,200.00 | 10,000.00 | 1,000.00 |
| 08 | கும்பலை மாட்டிறைச்சிக்கடை | 1,750.00 | 629,100.00 | 10,000.00 | 1,000.00 |
| தெல்லிப்பளை உப அலுவலகம் | | | | | |
| 01 | கூத்தன்சீமாச் சந்தைகோழிக்கடை | 1,050.00 | 73,150.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | கூத்தன்சீமாச் சந்தைகருவாட்டுக்கடை | 1,050.00 | 1[illegible]675.00 | 1,000.00 | 1,000.00 |
| மயிலிட்டி உப அலுவலகம் | | | | | |
| 01 | வீமன்காமம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 19,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | குரும்பசிட்டி சந்தை | .......... | 10,640.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | குரும்பசிட்டி கோழிக்கடை | 1,000.00 | 38,200.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | குரும்பசிட்டி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 157,920.00 | 1,000.00 | 1,000.00 |
| காங்கேசன்துறை உப அலுவலகம் | | | | | |
| 01 | காங்கேசன்துறை பொதுச்சந்தை | .......... | 71,250.00 | 1,000.00 | 1,000.00 |

**குறிப்பு :**


* மேலதிக விபரங்களை 2021.10.22 ஆம் திகதிய பத்திரிக்கையில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் கேள்வி அறிவித்தல் 2022 விளம்பரத்தை பார்வையிடவும்.

**திரு.சோமசுந்தரம் சுகிர்தன்.**
**தலைவர், உள்ளூர் அதிகார பெறுகைச்சபை.**
**வலிகாமம் வடக்குபிரதேச சபை,**
**காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி).**

(cr.5863) (2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 08 . 1939



இறப்பு 08 . 11 . 2021

## கலாநிதி ஆறுமுகம் சிவசம்பு விவேகானந்தன்

**(Retired Deputy Director of Agriculture)**

தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவசம்பு விவேகானந்தன் நேற்று (08.11.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சிவசம்பு, தங்கமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசசேகரம் அரசரெத்தினம் அம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், கனகேஸ்வரியின் பாசமிகு கணவரும், யோகதுரை (Ranjith Construction), ரேனுகா (Denmark) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாளன், யசோதா ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஞ்சித்குமார், அருண்குமார், ஷைனுதா (Denmark), சந்தியா (Denmark) ஆகியோரின் பாசமிகு பேரனும், நடேசன், ஜெயதாஸ் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2021) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, உடல் தகனத்திற்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கனகேஸ்வரி (மனைவி) - 021 222 0196**
**யோகதுரை (மகன்) - 077 247 0590**
**ரேனுகா (மகள்) - 0045501 47298**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 17983) 1-6

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -01 காரைநகர் 3ம் ஒழுங்கை வரிமதிப்பீட்டு இலக்கம் 11 என்னும் இலக்கத்தைக் கொண்ட ஆதனம் S.விஸ்வலிங்கம் செட்டியார் என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

இவ்வாதனம் பிரசித்த நொத்தாரிசு சின்னத்துரை கனகரத்தினம் முகதாவில் 1968.05.09ம் திகதி 7490 ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி ஊடாக யாழ்ப்பாணம் கொட்டடியிலிருக்கும் சின்னப்பொடி சின்னையாவும் பெண் பாக்கியம் அல்லது நாகமுத்துவினால் அவ்வூர் சின்னையா மகள் பாக்கியலெட்சுமிக்கு அறுதியாக கொடுக்கப்பட்டது.

குறித்த 7490ம் இலக்க உறுதியின் தாயுறுதி பற்றிக் குறிப்பிடுகையில் இவ்வாதனம் பிரசித்த நொத்தாரிசு வை.சிவசுப்பிரமணியம் முகதாவில் 1959.07.18ம் திகதி 3780ம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதி ஊடாக யாழ்ப்பாணம் வண். மேற்கு கொட்டடி கடற்கரைத்தெருவைச் சேர்ந்த ஆண்டி சின்னான் என்பவரால் அவ்வூர் ஆஸ்பத்திரி வீதி 50 / 12ம் இலக்கத்தில் இருக்கும் சின்னப்பொடி சின்னையாவுக்கும் பெண் பாக்கியத்திற்கும் அல்லது நாகமுத்துவுக்கும் அறுதியாக விற்கப்பட்டுள்ளது.

தற்போது இவ்வாதனம் பிரசித்த நொத்தாரிசு கமலச்சந்திரன் கீர்த்தனா முகதாவில் 10.10.2019ம் திகதியில் 1041ம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதி ஊடாக சின்னையா மகள் பாக்கியலட்சுமி மரண சாதன நிர்வாக தத்துவப்பத்திரம் பெறுவதற்கு குறைவான சொத்துக்களை விட்டு இறந்த நிலையில் காலஞ்சென்ற அவரது சகோதரர் சின்னையா நவரத்தினத்தினை வந்தடைந்தது என்றும் குறித்த சின்னையா நவரத்தினம் நிர்வாக தத்துவப்பத்திரம் பெறுவதற்கு குறைவான சொத்துக்களை விட்டு 2010ம் ஆண்டளவில் இறந்த நிலையில் சின்னையா நவரத்தினத்தின் ஒரே ஆண் வாரிசான இல 93 ஆஸ்பத்திரி வீதி கொட்டடியைச் சேர்ந்த நவரத்தினம் நர்மதன் என்பவரால் முத்தமிழ் வீதி 3ம் ஒழுங்கை கொட்டடியைச் சேர்ந்த சிவகுரு ஜெயராசாவும் பெண் ஜெனிற்றாவுக்கு அறுதியாக விற்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்:-** வட்மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார் பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை " பனைவிளித்தோட்டம்" நிலபரப்பு 01 குளி 10 ½ இந்த நிலப்பரப்பு ஒன்று குளி பத்தரைக்கும் முன்னுறுதிபடி எல்லைகள்

**கிழக்கு** :- வீதிக்கென ஒதுக்கப்பட்ட 1 ½ விஸ்தீரணமான ஆதனம்.
**வடக்கு** :- ஆண்டி சின்னத்துரையின் ஆதனம்.
**மேற்கு** :- சோமசுந்தரம் இராசரத்தினத்தின் ஆதனம்.
**தெற்கு** :- சின்னவன் பெண் குழந்தை ஆதனம். இவ் எல்லைப்படி இதடங்கலும்.

தற்போது சிவகுரு ஜெயராசா பெண் ஜெனிற்றா இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சிவகுரு ஜெயராசா பெண் ஜெனிற்றா என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை.**

(cr 35846) (2.6)

# மரண அறிவித்தல்



## சுரேஸ்குமார் பவித்திரன்

**(க.பொ.த.சாதாரணதரம் - யா/ஹாட்லிக் கல்லூரி)**

துவானி வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வன் சு.பவித்திரன் நேற்று (08.11.2021) திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் பொ.சுரேஷ்குமார் (சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம், கரவெட்டி) யுகந்தினி (ஆசிரியை, யா/ஹாட்லிக் கல்லூரி) தம்பதியரின் ஏக புத்திரனாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மேற்படி முகவரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (09.11.2021) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியை வல்லை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CR 5856) 1-6

**உடுப்பிட்டி.**
**077 232 3743**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா
## கற்கைநெறி பரீட்சைகள்

**முழு நேரம் இரண்டாம் அரையாண்டு 2019/20**
**பகுதி நேரம் II முதலாம் அரையாண்டு 2018/20**
**பகுதி நேரம் II இரண்டாம் அரையாண்டு 2018/20**

மேற்படி பரீட்சைகள் எதிர்வரும் கார்த்திகை மாத பிற்பகுதியில் நடைபெறும்.

பரீட்சைகளுக்கான விண்ணப்ப படிவங்களை பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்துறை அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதி 15.11.2021 ஆகும். பரீட்சைக்கான நேர அட்டவணையை கல்வியியற்துறை அலுவலக விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.

பரீட்சார்த்திகள் பரீட்சை கட்டணத்தினை மக்கள் வங்கியின் ஏதாவது ஒரு கிளையில் பின்வரும் குறிப்பு எண்களுக்கு (Reference No.) பணத்தினை செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்ப படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

**முழு நேரம் இரண்டாம் அரையாண்டு 2019/20**
**040000470001944**


**பகுதி நேரம் II முதலாம் மற்றும் இரண்டாம் அரையாண்டு 2018/20 040000460001938**

தெளிவற்ற மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(CR 5864) 1-6

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மடியில் 01 . 08 . 1946

இறை அடியில் 09 . 11 . 2014

## அமரர் யோசவ் பிரான்சிஸ் சேவியர்

"ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது"

அன்பே உருவாகி எங்களைப் பராமரித்துப்
பாதுகாத்த அப்பா!
ஆறமுடியாமல் ஏங்கித் தவிக்கின்றோம்
அந்த நாள் இன்றுபோல் - எம்
கண்களில் நிழலாடுகிறது
ஏழு ஆண்டுகள் என்ன - எமது
இறுதி மூச்சு இருக்கும் வரை
உங்கள் நினைவுகளுடன் வாழுகின்றோம்
இறைபதம் இன்புற்றிருக்கும்
நீங்கள் எங்களுக்காக
இறைவனிடம் வேண்டிடுங்கள்

27/18,புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs 17966) (2.6)

### படம் பார்த்துவிட்டு உறங்கியவர் சாவு

திரையரங்கில் திரைப்படம் பார்த்துவிட்டு வீட்டுக்குச் சென்று உறங்கியவர் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில், குருநகர், யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ரின்சிலின் சாம்சன் (வயது - 30) என்பவரே நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டார். அசைவற்றுக்காணப்பட்ட அவரை, உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசென்றபோது, அவர் அதற்கு முன்னரே உயிரிழந்துவிட்டார் என்று பரிசோதனையில் தெரியவந்தது.

(து-26)

# STATE MINISTRY OF RURAL HOUSING & CONSTRUCTION AND BUILDING MATERIALS INDUSTRY PROMOTION.
## DEPARTMENT OF BUILDINGS

## INVITATION FOR BIDS

1. **The Chairman, Regional Procurement Committee**, on behalf of the **Department of Buildings** now invites sealed bids from eligible and qualified bidders for the works described below.

| Bid No. | Description of work | Estimate cost (Rs.million) | Construction Period | CIDA Grade | Bid Security (Rs) |
|---|---|---|---|---|---|
| RPC/CE(Z2)-21/11 | Construction of Medical Officers' rest room at Ayurvedic hospital – Kaithady | 9.13 | 90 Days | C7 or C6 | 92,000.00 |
| RPC/CE(Z2)-21/12 | Construction of Toilet for male & female staff for ayurvedic hospital - Kaithady | 3.15 | 30 days | C8 or C7 | 32,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure .Since the Total Cost Estimate of this Procurement is below Rs.50 Mn. Regional preference and CIDA grade preference shall apply as stipulated in public
Finance Circular No.04/2016(ii) & public Finance Circular No.03/2020.
3. To be eligible for contract award, the successful bidder/bidders shall not have been blacklisted and shall be registered in the field of building construction for Grade as indicated above table with the Construction industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.
4. Interested bidders may obtain further information from the **Chief Engineer's Office (Zone 2), Department of Buildings,** and inspect the Bidding Documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.**
Contact numbers are: Phone: 021 - 2222781, Facsimile: 021 - 2222781
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna** from **09.11.2021 until 23.11.2021** from **9:00hrs to 15:00 hrs upon payment of Non-refundable fee of Rupees Three Thousand only(Rs.3,000/-)**
6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna** to reach **on or before 10.00 hrs on 25.11.2021.** Bids will be opened soon after closing at the **Chief Engineer's Office (Zone 2), Department of Buildings, Beach Road, Jaffna** in presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid for a period of 91 Days from the last date fixed for receiving of Bids or any extended period.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the form included in Section 09 of the bidding document
   - in favour of **Director General of Buildings.**
   - for an amount indicated above table
   - valid up to **24.02.2022.**
   - issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data.

**Eng. A.Nawas Atham,**
Director (R2)
Department of Buildings,
2nd Floor,"Sethsiripaya",
Battaramulla.

(CR 35844) 1-6

**நல்லூர் பல நோக்கு கூட்டுறவு சங்கம் (வ/து)**
**ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி**

# பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்கு 18 - 45 வயதிற்குட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தினை சங்க காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ்கள், அனுபவச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ்கள் என்பவற்றை இணைத்து **தலைவர், நல்லூர் ப.நோ.கூ.சங்கம், ஆடியபாதம் வீதி திருநெல்வேலி** என்ற முகவரிக்கு 25.11.2021ற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

பதவி - லொறிச் சாரதி (312 /13)
சம்பள அளவுத்திட்டம் - 16365 - 19265
140x10 - 150x10

**தகமைகள்:**
05ம் வகுப்பு கல்விச் சான்றிதழும் பஸ் அல்லது லொறி அல்லது இழுவைப் பெட்டியுடன் டிராக்டர் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

**தலைவர்,**
**நல்லூர் ப.நோ.கூ.சங்கம்**
**தொ.இல.** 0212222143
0212222969

cr 5862 (2.6)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 23 . 05 . 1939

உதிர்வு 10 . 10 . 2021

கடந்த 10.10.2021 அன்று காலஞ்சென்ற
எமது குடும்பத்தின் குலதெய்வமான

## பொன்னுக்கோன் (வாரி) நல்லம்மா

அவர்களது அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (09.11.2021) செவ்வாய்க்கிழமை நடைபெறுகின்றது. அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் பிரிவுச் செய்தியை அறிந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த வெளிநாட்டு உறவுகளுக்கும் கண்ணீர் அஞ்சலி மற்றும் கண்ணீர் அஞ்சலி பதாகைகளை சமர்ப்பித்தவர்களிற்கும் மற்றும் பலவிதமான உதவிகளைப் புரிந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நாவற்குழி மேற்கு,**
**செல்வநகர்.**

(cs 17942) (2.6)

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### கதிரவேலு செல்லத்துரை

சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு செல்லத்துரை நேற்று (08.11.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, செல்லமுத்து, வைரமுத்து, பொன்னையா, தங்கம்மா, ஐயாத்துரை, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், வைத்திலிங்கம் - கதிர்காசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மங்கையற்கரசியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகம்மா மற்றும் அம்பலவாணர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், உருக்குமணி, புஸ்பராணி, உமாபதி, மனோறஞ்சினி, விஜயராணி, ஜெயராணி, காலஞ்சென்ற தவரஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற முருகையா மற்றும் தர்மகுலசிங்கம், யோகேஸ்வரன், கணேஸ், கஜநாதன், கோணேஸ்வரன், மாலினி ஆகியோரின் அன்பு மாமனும், வினோதா, மயூரன், விஜிதா, காலஞ்சென்ற மயூரா மற்றும் தர்சினி, யாழினி, நந்தினி, அர்ச்சனா, பிரியங்கன், கஜந்தினி, கபிலன், கயூரன், கஜந்தன், கஜன், அனுஷா, திலக்சனா, தர்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும், அச்சுதன், அர்ச்சயா, ஜிந்துஷா, ஹோபிநாத், கஸ்வினி, மிதின், கஜீபன், சுஜீவன், ரஸ்மிதா, சயானா, வித்தியா, விசாஹா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி கிழக்கு அவரது இல்லத்தில் இன்று (09.11.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுவிளான் கிராயிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.

(cs 41007) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05 . 12 . 1975



மறைவு
19 . 11 . 2020

### திருமதி பவானி மகிந்தன்

திதி: ஸ்கந்த பஞ்சமி

ஆண்டொன்று போனதுவே பவானி !
அகலுமா உன் பிரிவு எம்மை விட்டு
எங்கள் அனைவரினதும் உயிர் உள்ளவரை
அகலாது உன் பிரிவு
காலன் உனைக் கவர்ந்து ஆண்டொன்று சென்றாலும்
அழியவில்லை எம் சோகம்
உன் சிரித்த முகமும் உன் செயல்களும் எப்போதும்
எம் வாழ்வில் நிலைத்த வண்ணமே இருக்கும்
உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
சித்தி விநாயகரை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

(cs 41008) (2.6)

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவு

(09.11.2021)

அமரர்
பற்றிக் றோஸ்மலர்
(வேவி)

பிள்ளைகள்,
சகோதரர்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

149/2, கதீற்றல் லேன்,
யாழ்ப்பாணம்.

(CR 35842) 1-6



## எமக்கு...

பொருள்களின் விலையுயர்வு காரணமாக அரசுக்கு எதிரான போராட்டங்கள் நாடு முழுவதும் வலுப்பெற்றுவருகின்றன. குறிப்பாக விவசாயிகள் தீவிரமாக போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இந்தநிலையில், "எதிர்க்கட்சியினரே போராட்டங்களில் ஈடுபடுகின்றனர், போராடுமாறு தூண்டுகின்றனர்" என்று அரச தரப்பு ஒரு பிரிவு அமைச்சர்களும் எம்.பிக்களும் கூறிவருகின்றனர். இந்தநிலையில், அவற்றை மறுதலிக்கும் வகையில், உண்மையை உணர்த்தும் வகையில், அரச தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ மேற்கண்டவாறு பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுவரெலியா மாவட்டத்தில் ஆளும் கட்சி பிரதிநிதிகள் ஆடை அணிந்து கொண்டு வீதியில் இறங்கிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்தநிலைமை நாட்டுத் தலைவர்களுக்கும் ஏற்படக்கூடும்.

விவசாயிகளின் போராட்டங்களில் எதிர்க்கட்சிகள் இருக்கின்றனர் என்று கூறப்படுவது முற்றிலும் பொய்யான விடயமே. வறுமை மற்றும் நெருக்கடிகள் காரணமாகவே அனைத்து விவசாயிகளும் தாமாக முன்வந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அரசாங்கத்தில் சிலரது தான்தோன்றித்தனமான செயற்பாடுகளால் 69 இலட்சம் மக்களுக்காக தனித்துச் செயற்பட வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-இ)

## 'சமயம் கடந்து...

என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

எதிர்வரும் 20ஆம் திகதி "மதங்களைக் கடந்து இறந்தவர்களை நினைவு கூருவோம்" என வடக்கு - கிழக்கு ஆயர்கள் கூட்டாக அறிவித்திருப்பது தமிழர் தாயகம் மீது அரசியல் தாகம் கொண்டவர்களை, மாவீரர்களை தியாகிகளாக ஆத்மீக ரீதியில் உணர்வுபூர்வமாக அர்ச்சித்து எழுச்சியோடு நினைவு கூருபவர்களை பல்வேறு சந்தேகத்துக்கும் வேதனைக்கும் கோபத்துக்கும் உள்ளாக்கி இருப்பதால் இந்த அறிவித்தலை மீளப்பெற்றுக்கொள்ளுமாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது.

மே மாதம் 18ஆம் திகதி போரில் கொல்லப்பட்ட தம் உறவுகளுக்கு வடக்கு கிழக்கு மக்களும், புலம்பெயர் தமிழர்களும் அஞ்சலி செலுத்துகின்றனர். அந்தத் தினத்தில் அரசியல் நீதிக்கான அவசரத்தையும் வலியுறுத்தி செயற்படுகின்றனர். கத்தோலிக்கத் திருச்சபை அருட்தந்தையர்களும் நினைவு கூர்தலில் துணிச்சலோடு முன்நின்று செயற்படுகின்றனர். அதுமட்டுமல்ல முன்னாள் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் அடிகளார் தமிழர்களின் அரசியல் குரலாக ஒலித்தவர். இவர்களை நன்றியோடு பார்க்கின்றனர் தமிழர்கள்.

இந்தநிலையில், மாவீரர் வாரம் என்பது வெறுமனே இறந்தவர்களை நினைவு கூரும் காலம் அல்ல. தமிழர்களின் தாயக அரசியலுக்காக உயிர்த்தியாகமானவர்களை, தமிழர் தாயக மண்ணில் வித்தாகி தமிழர் உள்ளங்களில் உயிர்ப்போடு வாழ்ந்து எமது அரசியலை இன்னும் கூர்மைப்படுத்துகின்ற தியாகிகளுக்கு தியாகச் சுடரை ஏற்றி கௌரப்படுத்துகின்ற வாரமாகும்.

இத்தகைய புனித வாரத்தின் முதல் நாள் இறந்தவர்களை நினைவு கூருவோம் என அழைப்பு விடுப்பது மாவீரர் குடும்பங்களையும், அவர்களை தியாகிகளென, புனிதர்களென நினைக்கின்றவர்களை மட்டுமல்ல, மாவீரர்களையும் அவர்கள் எந்த அரசியலுக்காக தியாகமானார்களோ அந்த அரசியலையும் அவமதிக்கின்ற செயலுமாகும்.

தமிழர்களின் அரசியல் போராட்ட வரலாற்றில் உயிர்த் தியாகிகளான அருட்தந்தையர்கள், போராட்டக் களத்தில் நின்றவர்கள் என நூற்றுக்கணக்கான கத்தோலிக்கர்கள் உள்ளனர். அதே போன்று காணாமற்போன கத்தோலிக்கர்களும் உள்ளனர். இவர்களுக்காக நினைவுநாளை அறிவிக்காத திருச்சபை மாவீரர்வாரத்தின் முதல்நாள் நினைவு நாளாக அறிவித்தது ஏன்?

தமிழர் தாயகத்தையும் தமிழர் தாயக தேசிய அரசியலையும் சிதைக்க சர்வதேச சக்திகளும் உள்ளூர் சக்திகளும் கைகோர்த்து நிற்கின்ற காலம் இது. தமிழர்கள் 30 வருடங்களுக்கு முன்பே ஏற்றுக்கொள்ளாத மாகாணசபையை முழுமையாக உட்படுத்துமாறு அழிவு சக்திகள் கூடுகின்ற காலங்களில், இன்னும் ஒரு பக்கத்தில் 'ஒரே நாடு ஒரே சட்டம் 'என இனவாதக் காவியின் கையில் இனஅழிப்பை தீவிரமாகத் திட்டமிடுகின்றனர்.

இந்தநிலையில் இறந்தவர்களை நினைவு கூர மாவீரர் வாரத்தின் முதல் நாளை அறிவிப்பதன் மூலம் ஆயர்களும் எமக்கு எதிரான சக்திகளோடு மறைமுகமாகக் கைகோர்த்து எனது அரசியல் உணர்வையும் தியாக வரலாற்றையும் நீர்த்துப்போகச் செய்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனரோ என்று சந்தேகம் கொள்ள வைக்கின்றது.

அத்தோடு வேறு சமயத் தலைமைகளையோ, பொது அமைப்புக்களையோ கலந்துரையாடாமல் இத்தகைய பொது அறிவித்தலை விடுப்பது அவர்களை அவமதிப்பதாக அமைந்திருப்பதோடு தன்னிச்சையாக அறிவிப்பு செய்திருப்பது தமிழர்கள் மத்தியில் இன்னுமொரு பிளவையும் ஏற்படுத்திவிடலாம் என்பதையும் சிந்திக்கத் தவறியமை வேதனைக்குரியது.

ஆதலால் மாவீரர் வாரத்தின் புனிதம், மாவீரர்களின் தியாக வரலாற்றை அடுத்த சந்ததிக்குக் கடத்தும் செயற்பாடு, தாயக அரசியலுக்கான கூட்டு செயற்பாடு என்பன கருதி "சமயம் கடந்து இறந்தவர்களை நினைவு கூருவோம்" எனும் அறிவித்தலை வடக்கு கிழக்கு ஆயர்கள் மீளப் பெற்றுக் கொள்ளுமாறு கௌரவத்தோடு வேண்டுகோள் விடுக்கின்றோம்-என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-110)

## அரசைக்....

கள் விடுதலை முன்னணியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் 'ஊரிலிருந்து தொடங்குவோம்' என்ற தொனிப்பொருளிலான மக்களுடானான உரையாடல் மற்றும் துண்டுபிரசுர விநியோகத்தை யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பித்து வைத்த பின்னர் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முற்பகல் 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பித்த குறித்த நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்னாயக்க, அந்தக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரம் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது வியாபாரிகளிடமும் பொது மக்களிடமும் இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டதுடன் ஆட்சி மாற்றத்தின் அவசியம் தொடர்பாகவும் வலியுறுத்தப்பட்டது.

இதன்போது, பிமல் ரத்நாயக்க மேலும் தெரிவிக்கையில்,

தற்போதுள்ள அரசாங்கமானது மக்களை ஏமாற்றும் தனது நாடகத்தை அரங்கேற்றி வருகின்றது. குறிப்பாக இராணுவத்தைப் பயன்படுத்தி சேதன விவசாயத்தை வலுக்கட்டாயமாக முன்னெடுப்பேன் என ஜனாதிபதி தெரிவிக்கும் அளவுக்கு இந்த நாட்டில் அராஜகம் தலைவிரித்தாடுகின்றது.

தற்போது பால்மா, எரிவாயு போன்றவற்றுக்கு தட்டுப்பாடு நிலவிவருகின்ற நிலையில், கோத்தாபய அரசாங்கமானது தனது குடும்ப ஆட்சியை மென்மேலும் விரிவுபடுத்துகின்றது.

நாட்டில் ஒரு கோடி மக்கள் விவசாயிகளாக உள்ள நிலையில் , நெற்கதிர் என்றாலே என்னவென்று தெரியாத ஜனாதிபதிதான் தற்போது விவசாயப் புரட்சி ஏற்படுத்துவேன் என்றுகூறி மக்களை ஏமாற்றி வருகின்றார். எனவே, எதிர்வரும் காலத்தில் அனைவரும் ஒன்றிணைந்து ஆட்சியை மாற்றி நாட்டை முன்னோக்கி கொண்டுச்செல்வதற்கு ஒத்துழைக்க வேண்டும்- என்றார். (கு-125)

## பௌத்த...

சிரேஷ்ட பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

பௌத்தவிகாரையின் சிதைவுகளே வெடுக்குநாறிமலையில் உள்ளன என தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அநுர மனதுங்க அண்மையில் வவுனியாவில் வைத்து ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார்.

இந்தவிடயம் தொடர்பாக பேராசிரியரிடம் தொடர்புகொண்டு வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆதியிலே பௌத்தம் என்பது தமிழர்களுக்குமுரிய ஒரு பண்பாட்டு சின்னமாகத் தான் காணப்பட்டது.

இந்து மதமும் இங்கே சிறந்து விளங்கியது. ஆகவே வன்னிப் பிராந்தியத்தில் வெடுக்குநாறி மலையில் பௌத்த சின்னங்கள் காணப்படுமானால் அங்கு சிங்கள மக்கள் வாழ்ந்ததன் அடையாளமாக பார்ப்பது மிகவும் தவறான ஒரு கண்ணோட்டம், அவ்வாறு பார்க்க முடியாது. ஏனென்றால், இந்த பௌத்த மதம் இலங்கையில் மட்டுமல்லாமல் உலகிலே பல நாடுகளில் பல இனம், பல மொழி பேசுகின்ற மக்களிடையே பரவியதுண்டு.

ஆகவே, வெடுக்குநாறி மலையில் ஆதியிலே இந்துமதம் இருந்து பின்னர் அதிலே கணிசமான மக்கள் பௌத்தர்களாக மாறி பலர் இந்துக்களாக வாழ்ந்த காலகட்டத்திலே வன்னிப் பிராந்தியத்தில் தமிழ் பௌத்தமும் இருந்திருக்கலாம் என்பதிலே எந்தவித மாற்றுக்கருத்தும் இல்லை.

ஆனால் பௌத்த சின்னங்களை வைத்துக்கொண்டு அது சிங்கள மக்களுக்குரியதென்றும், அதனாலே அந்த இடங்களில் சிங்கள மக்கள் வாழ்ந்தார்கள் எனவும் கூறுவது பொருத்தமானது அல்ல. இது இலங்கையிலுள்ள பல அறிஞர்களதும் பொதுவான கருத்தாகும் .

பௌத்த சிங்கள மக்கள் வாழாத இடங்களில் பௌத்த சின்னங்கள் காணப்படுமானால் அந்த இடங்களில் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற தமிழரோடு தொடர்புபடுத்தித்தான் அதனைப் பார்க்க வேண்டும்.

பௌத்தம் சார்ந்த சின்னங்களை வழிபாட்டுக்குரிய இடங்களாக மாற்றுவது பொருத்தமில்லை. மாறாக முன்பொரு காலத்தில் வன்னியிலே பௌத்த மதமும் இருந்ததென்ற ஒரு அடையாளமாக அதனை பாதுகாக்கலாமே தவிர, அதனை வழிபாட்டுக்குரிய இடமாக மாற்றுவது இன நல்லுறவைப் பாதிக்கின்ற ஒரு செயலாகத்தான் இருக்கும். - என்று தெரிவித்தார். (த-110)

## மழையைச்...

பாரப் பணம் 30 ஆயிரம் ரூபாவையும் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி வடக்கு டச்சு வீதியில் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றது.

மழை பெய்துகொண்டிருந்த வேளையில் வர்த்தக நிலையத்தின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த நான் கரைப் பவுண் நிறையுடைய மோதிரங்கள், சங்கிலிகள் மற்றும் பணத்தை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

வர்த்தகர், நேற்றுகாலை வர்த்தக நிலையத்தைத் திறக்கச்சென்றபோதே திருட்டு இடம்பெற்றமை தெரியவந்தது. இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-9)

## பணிப்பாளர்...

குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பனை அபிவிருத்திச் சபையின் உயர் முகாமைப் பணியாளரால் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஒழுக்காற்று விசாரணைகள் ஏதுமின்றி பணியாளர்கள் சட்டத்துக்கு மாறாக பணிநீக்கம், சேவை இடைநிறுத்தம் மற்றும் கட்டாய விடுப்பு வழங்கியமை தொடர்பிலேயே குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளகக் கணக்காய்வில் இனங்காணப்பட்டு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணை செய்யப்பட்டு வரும் மோசடிகளை முழுமையாக மூடி மறைப்பதற்காகவே முறையற்ற முகாமைச் செயற்பாடுகளை பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் மேற்கொண்டார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (த-10)

## இந்திய...

கரை ஒதுங்கியுள்ளது என்று ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

தமிழகத்தின் நாகை மாவட்டத்தைச் சேர்ந்த பழனி என்பவரின் சடலமே காரைநகரில் மீட்கப்பட்டதாக இந்திய செய்திகள் கூறியுள்ளன.

அவர் ஒரு வாரத்துக்கு முன்னர் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது தவறி கடலில் வீழ்ந்து காணாமற்போயிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த சடலத்தை மீட்ட ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-125)

© 2000 Agfa-Gevaert N.V.

## கீரைச் செய்கை இம்முறை அழிவு

யாழ்ப்பாணம், நவ. 9
பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பித்துள்ளதால், கீரைச் செய்கை இந்த முறை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.
வலி. கிழக்கில் கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர் போன்ற இடங்களில் இந்த முறை கீரைப் பயிர்ச்செய்கையில் அதிகளவு விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.
தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளதால், கீரையும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் விவசாயிகள் எதிர்பார்த்த அறுவடையைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.
இந்த நிலையில் சந்தையில் கீரைக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதுடன், விலையும் உயரும் என்று செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-4,17)

## மீன்பிடித்தவர் நீரில் மூழ்கிச் சாவு!

கொழும்பு, நவ. 9
குளம் ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் முந்தல் - புதுக்குடியிருப்பு பகுதியில் இடம்பெற்றது. அவர் குளத்தில் மூழ்குவதை அவதானித்த சிலர் குறித்த நபரை மீட்டு, மருத்துவமனையில் சேர்த்த போதிலும் அவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். (ம-4)

## அரசியல் நோக்கங்களுக்கு அரசு பல்கலைகளை பயன்படுத்துகிறது

*கண்டிக்கிறது பல்கலை மாணவர் சங்கம்*

கொழும்பு, நவ. 9
இலங்கை அரசு, அரசியல் நோக்கங்களை முன்னெடுப்பதற்கு பல்கலைக்கழகங்களை பயன்படுத்துகின்றது என களனி பல்கலைக்கழக மாணவர்கள் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது. இது தொடர்பில் அந்த அமைப்பு மேலும் தெரிவிக்கையில்,
இலங்கை அரசு, அரசியல் நோக்கங்களை முன்னெடுப்பதற்கு பல்கலைக்கழகங்களை பயன்படுத்துகின்றது. அண்மையில் வேந்தர்கள் மற்றும் துணைவேந்தர்கள் நியமிக்கப்பட்ட விதம் இதனை புலப்படுத்துகின்றது. தற்போதைய அரசை ஆட்சிக்கு கொண்டுவந்த மத குருமாரை பல்கலைக்கழகப் பதவிகளுக்கு நியமிப்பதாலேயே இந்த நியமனங்களை எதிர்க்கின்றோம் - என்றுள்ளது. (ய)







# கிளாஸ்கோ படுதோல்வி!

### கிரைட்டா கடும் விமர்சனம்

**வொஷிங்டன், நவ. 9**
**ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற பருவநிலை மாநாடு படுதோல்வியில் முடிவடைந்துள்ளது என்று பருவநிலை ஆர்வலரான கிரைட்டா துன்பேர்க் தெரிவித்துள்ளார்.**

பருவநிலை மாற்றத்துக்கு எதிராக உலகத் தலைவர்கள் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட அவர், இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,
காலநிலை மாற்றம் தொடர்பான உச்சி மாநாட்டில் ஒருவார காலமாக உலகத் தலைவர்கள் வெற்றுப் பேச்சுக்களையே பேசியுள்ளனர்.
இந்த மாநாடு படுதோல்வி என்பதை யாருக்கும் சொல்லித் தெரியத் தேவையில்லை. இது ஒரு கண் துடைப்பு மாநாடு.
விஞ்ஞானிகள் காலநிலை மாற்றம் தொடர்பாக அறிவியல் ரீதியாக முன்வைக்கும் உண்மைகளை உலகத் தலைவர்கள் புறந்தள்ளமுடியாது. அதுபோலத்தான் அவர்கள் எங்களையும் புறக்கணிக்கமுடியாது. உண்மையில் தலைவர்கள் வழிநடத்துபவர்களாக இல்லை.
இப்படித்தான் தலைமை இருக்கிறது என்பது வேதனை - என்றார். இந்த வருடம் நடைபெற்ற கிளாஸ்கோ மாநாட்டில் கார்பன் வெளியேற்றத்தை உலக நாடுகள் கட்டுப்படுத்த வேண்டும் என்று பெரியளவில் வலியுறுத்தப்பட்டது.
ஆனால், கார்பன் வெளியேற்றம் தொடர்பில் இதுவரை வெளியிடப்பட்ட 5 அறிக்கைகளில் ஒன்றையேனும் நடைமுறைப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



வட்டுக்கோட்டை தபாலகத்தில் உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் பரநிருபசிங்கம் அருள்ராசனுக்கு அண்மையில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. (ம-4)

## வீதியை சீரமைத்து தருமாறு கோரிக்கை



மன்னார், நவ.9
மன்னார் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பறப்பாங்கண்டல் கிராம அலுவலர் பிரிவின் மேற்குப் பகுதி வீதி சீரின்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று பொது மக்கள் தெரிவித்தனர். அந்தப் பகுதி மக்களின் பிரதான போக்குவரத்து மார்க்கமாக உள்ள இந்த வீதி, தற்போது பெய்துவரும் மழையால் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இந்தப் பாதையால் மாணவர்கள் உட்படப் பலரும் நாளாந்தம் பயணம் செய்யும் நிலையில், தற்போது வீதியால் பயணிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.
இந்த வீதி 10 ஆண்டுகளுக்கு முன்னர், சீரமைப்புச் செய்யப்பட்டது. தற்போது வீதி சேதமடைந்துள்ள நிலையில், அது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.
இந்த வீதியைச் சீரமைத்து, போக்குவரத்தை இலகுபடுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-10)

## சீனா-இலங்கைக்கிடையில் எவ்வித மோதலும் இல்லை!



கொழும்பு, நவ. 9
சேதனப்பசளை விவகாரத்தால் சீனா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையில் எந்தவித பிரச்சினையும் இல்லை. இது இரு தரப்பினருக்கிடையிலான வர்த்தக நடவடிக்கையே. மாறாக இராஜதந்திர நகர்வு அல்ல என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
உரப்பிரச்சினையானது இராஜதந்திர பிரச்சினை அல்ல. அதேபோல இரு அரசுகள் மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான பிரச்சினையும் கிடையாது. வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினையாகும்.
வழக்குத் தொடுப்பதற்கு சீன நிறுவனத்துக்கு அதிகாரம் உள்ளது. இந்த விவகாரம் நீதிமன்றில் உள்ளதால் அது பற்றி ஆழமாக கருத்துரைக்க முடியாது. இது சீன அரசு போட்ட வழக்கும் கிடையாது- என்றார். (ம-4,44)

**மணமகன் தேவை**
யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 இல் பிறந்த கார்த்திகை 2 ஆம் பாதம் காரைநகரில் வசிக்கும் மணமகளுக்கு மணமகன் தேவை.
Whatsapp Viber +143 777 81050
077 403 0760
(cs 40635) (2.6)

**உடனடி வேலைவாய்ப்பு**
சர்வதேச காப்புறுதி நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.
1. நிதி ஆலோசகர் 2. முகாமையாளர் 3. குழுத் தலைவர்
சம்பளம் Rs.40000 - 70000 வரை
தகுதியுடையோர் 10.11.2021 அன்று 9-12 மணிவரை நேர்முகத் தேர்வு நடைபெறுகிறது.
தகுதியுடையோர் பின்வரும் முகவரிக்கு சமூகமளிக்கவும்.
NALTC
134, Adiyapatham Road, Thirunelvely (CS 17981) 1-6
076 2832397



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.